பொதுசன நூலகம்
12 JUL 2004
யாழ்ப்பாணம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 28 | திங்கட்கிழமை | (12.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 206

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

### முப்படைத் தளபதிகள் சகிதம்

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

### பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்வார்கள்

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்கா இன்று யாழ்பபாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.அவருடன் முப்படை அதிகாரிகளும் இந்த விஜயத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு நிலைபரம் குறித்து நேரடியாக ஆராயு முகமாகவே இவரின் விஜயம் அமையவுள்ளது.இந்த விஜயத்தின் போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களையும் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் காங்கேசன்துறை துறைமுகத்திற்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார். யுத்த நிறுத்தம் அமுலில் உள்ள போதும், நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் மிகவும் மோசமடைந்துள்ளதாகவும், இதனால் பாதுகாப்பு ஏற்பாடுகளை முழு உசார் நிலையில் வைத்திருக்குமாறும் புலனாய்வுத் துறை அதிகாரிகள் அரசுக்குப் பணித்திருப்பதாக்வும் கூறப்படுகிறது.

இதனையொட்டியே முப்படைத் தளபதிகள் சகிதம் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் முன்னாள் பிரதமருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கா இன்று யாழ்.வருகிறார்.

இதேவேளை, அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் பலாலி இராணுவப் படைத் தளத்தில் தங்கியிருந்து இராணுவப் புலனாய்வு அதிகாரிக

(12ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த மேகம் கருக்கட்டுகிறது

# போர் வெடிக்கும் அபாயம்!

### ரி-56 உடன் கொழும்பு சென்ற மட்டு.இளைஞர் கைதானார்

### ஹட்டன் இளைஞர் இருவரும் கைது

(கொழும்பு)

முல்லேரிய அப்புத்தளைப் பொலிஸ் சோதனைச் சாவடியில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவரிடமிருந்து ஆயுதம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், பல முக்கிய தகவல்களும் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹட்டனில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த கடுகதி தனியார் செகுசு பஸ் ஒன்றை சோதனையிட்ட பொலிஸார் நேற்று முன்தினம் மூன்று இளைஞர்களைச் கைது செய்துள்ளனர்.

இவர்களில் ஒருவரிடம் இருந்து ரி-56 ரகத் துப்பாக்கி உட்பட பல

(12ஆம் பக்கம் பார்க்க)

### கண்காணிப்புக் குழுத் தலைவர்

### தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

(லண்டன்)

**இலங்கையில் மீண்டும் ஒரு போர் வெடிக்கும் அபாய நிலைமைக்குள், அரசாங்கம் நாட்டை இட்டுச் செல்வதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரிக்கைச் சமிக்ஞை வெளியிட்டிருக்கிறார்.**

இன்றைய சமாதான நடவடிக்கையின் நிலைமைகள் குறித்து லண்டன் பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியிலேயே தமிழ்ச்செல்வன் இந்த அபாய எச்சரிக்கையைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை மீண்டும் மெதுமெதுவாகப் போர்ச் சூழ்நிலைக்குள்

போர் நிறுத்தம் ஏற்பட்டு இரண்டரை ஆணடுகள் கழிந்த நிலையில் அமைதி, சமாதான நடவடிக்கைகள் இப்போது மிகவும் கீழான நிலைக்குச் சென்றிருக்கின்றது.

ஆட்சியில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம், நம்பிக்கையீனமாகச் செயற்படுகின்றது.போர் நிறுத்தக் காலததில் ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கைகள் தற்பொழுது தகர்த்தெறியப்பட்டுள்ளன.

பொது மக்கள் மற்றும் போராளிகள் மீதான படுகொலைகளை நிறுத்த அரசாங்கம் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நாம் தொடர்ந்து வலியுறுத்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

வாகப் போர்ச் சூழ்நிலைக்குள் திரும்பிப் போய்விடுமென்றே நாம் கருதுகின்றோம். ஏனெனில் அரசின் சமகால நடவடிக்கைகள் அதனையே காட்டுகின்றன.

செயற்படுகின்றது.போர் நிறுத்தக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்சசெல்வனை இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்பியுறு ஹெவ்டே சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பு நேற்றுக் காலை 11.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது. உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த கண்காணிப்புக் குழுத் தலைவரை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் வரவேற்றார்.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் கலந்து கொண்டனர்.

அவசர ஏற்பாடாக மேற்கொள்ளப்பட்டிருந்த இச் சந்திப்பில் தற்

(12ஆம் பக்கம் பார்க்க)

அன்பு மாணவர்களே!
உள்ளே!
க.பொ.த (சா/த) பரீட்சை
மாதிரி வினாத்தாள் கணிதம் -I
ஆக்கம்:
திரு.க.ஆதித்தன்
ஆசிரியர்

# தனது பாதுகாப்பை அதிகரிக்குமாறு ஜனாதிபதியிடம் டக்ளஸ் கோரிக்கை

(கொழும்பு)

ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனக்கு மேலதிக பாதுகாப்பு வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கோரியுள்ளார்.

அண்மையில் கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் தன்னைக் குறிவைத்தே மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா தனக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்படும் விடயத்தில் ஜனாதிபதியின் நேரடித் தலையீட்டைக் கோரியுள்ளார்.

ஏற்கனவே தனக்கும் தனது அமைச்சுக்கும் மேலதிக பாதுகாப்பை டக்ளஸ் தேவானந்தா கோரியிருந்தார். இருந்தபோதிலும் அக் கோரிக்கை பாதுகாப்புப் பிரிவினரால் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஏ-9 வீதியில் வாகன விபத்து; யாழ்.பல்கலை மாணவன் பலி

(கிளிநொச்சி)

ஏ-9 வீதியில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஆனையிறவுக்கும் பரந்தனுக்குமிடையில் லொறியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இளைஞர் தலைசிதறிப் பலியானார்.

இத்துயரச் சம்பவத்தில் யாழ். பல்கலைக் கழக வணிகத் துறை மாணவனான கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த தேவராசா உதயகுமார்(வயது24) என்பவரே மரணமானவராவார்.

இதேவேளை கந்தசாமி அசோக்குமார்(வயது29) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-121)

## மக்களின் எதிர்பார்ப்பு பாழடிக்கப்படமாட்டாது

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே மக்களின் பலமான ஆணை இருக்கிறது



## ஜனாதிபதி சந்திரிகா பெருமிதம்

(கொழும்பு)

மேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குப் பலமான ஆணையை மக்கள் வழங்கியிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தொிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்ற இந்த வெற்றி மகத்தானதென்றும் பதின்மூன்றாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு பெற்ற வெற்றியை இத்தேர்தலில் ஸ்திரப்படுத்தி நிலை நாட்டியிருக்கிறதென்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

வடமேல் மாகாணத்தோடு சேர்த்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் ஏழு

(12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# செய்தித்துளிகள்

## கொடியேற்றம்

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வருடாந்த தேவி உற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 20 - 21 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

திருவிழாக் காலங்களில் யாழ். பஸ்நிலையத்தில் இருந்து ஈழத்துச் சிதம்பரம் வரை விசேட பஸ்சேவையும் தினமும் மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது. (உ-246)

## விளையாட்டு உபகரணங்கள்

(காரைநகர்)

காரைநகர் வியாவில் முன்பள்ளி நிலையத்திற்கு வியாவில் ஐயனார் ஆலயத்தினால் ஒரு தொகுதி விளையாட்டுப் பொருட்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், மேற்படி முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டியும் வியாவில் ஐயனார் ஆலயத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-246)

## ஆடிவேல் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ்பெற்ற கதிர்காம ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறும் தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மொனறாகலை மாவட்ட அரச அதிபர் மேற்கொண்டு வருகின்றார். (உ-10)

## மூலதன நன்கொடை ஒதுக்கீடு

(சுதுமலை)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்கென இவ்வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட உள்ளூராட்சி மூலதன நன்கொடை நிதியாக ஒரு இலட்சத்து ஐயாயிரத்து எண்ணூறு ரூபா வழங்கப்பட்டுள்ளதாகப் பிரதேச சபையின் செயலாளர் பி.விக்ரர் தெரிவித்துள்ளார்.

மேற்படி மூலதன நன்கொடை மூலம் மானிப்பாய், ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்பு மற்றும் மாதகல் ஆகிய பிரதேசங்களிலுள்ள உப அலுவலகப் பிரிவுகளில் உள்ள 68 சனசமூக நிலையங்களிற்கு மூலதன நன்கொடை நிதி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, இப் பகுதியில் பாவனையிலுள்ள மலசலகூடங்களைப் பேணுவதற்கு ஏற்றதாக 19 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (252)

## குடிநீர்த் திட்டம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனத்தினால், புத்தூர் கலைமகள் சனசமூக நிலையத்திற்கு அருகாமையிலுள்ள குடியிருப்பில் குடிநீர் திட்டமொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் மேற்படி பகுதியிலுள்ள சுமார் 55 குடும்பங்களின் குடிநீர்த் தேவை பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்திருந்த தாய்லாந்து விஞ்ஞானி ஜிம் ஷாஜி, மேற்படி குடிநீர் விநியோகத் திட்டத்தைப் பார்வையிட்டு திருப்தி தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (16)

## புதிய செயற்குழு

(யாழ்ப்பாணம்)

வலி . கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவின் அரசாங்க சேவையில் ஓய்வு பெற்றோரின் புதிய செயற்குழு அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்திலேயே இச் செயற்குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தலைவர்:- கி.தங்கவடிவேல்
செயலா:- சி.வை.சிவசிதம்பரநாதன்
பொருளாளர்:- பொ.குணரத்தினம்
உபதலைவர்:- து.தனபாலசிங்கம்
உபசெயலர்:- வ.சிவலிங்கம்

மற்றும் நிர்வாக அங்கத்தவர்களாக,
இ . குமாரசாமி, இ . மயில்வாகனம், கு . அப்புத்துரை

ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். (ச)

## பொலிஸார் மீது தாக்குதல

(வவுனியா)

வவுனியா பூவரசங் குளத்தில் குற்றத்தடுப்புப் பொலிஸார் நால்வர் பொதுமக்களினால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் கடுமையான காயங்களுக்கு உள்ளான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை 10 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சட்டவிரோத மது பாவனையைக் கண்டுபிடிக்கும் நோக்கில் ஆயுதங்களின்றி சிவில் உடையில் 4 பொலிஸார் பூவச ரங்குளத்திற்கு இரவு 10 மணியள வில் சென்றுள்ளனர்.

இவர்களது நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட அப்பகுதி மக் கள் துரத்தித் துரத்தி கடுமையா கத் தாக்கினர். இதில் நான்கு பொலிஸாரும் காயமடைந்தனர்.

(த-13)

## நடிகை திரிஷா கொழும்பு வருகை

(கொழும்பு)

தென்னிந்தியத் திரைப்பட நடிகையும், மிஸ் சென்னையுமான திரிஷா கிருஷ்ணன் கொழும்பு வந்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு மினாஷாவில் இடம்பெற்ற றோட்டறிக் கழகத்தின் 19 ஆவது தலைவர் தெரிவு நிகழ்வில் கலந்து கொள்ளவே இவர் கொழும்புக்கு வருகை தந்துள்ளார்.

இருபத்தியொரு வயதான திரிஷா, மிஸ் சென்னையாகத் தெரிவு செய்யப்படும் முன்னர், தனது கலைமாணிப் பட்டப்படிப்பை பல்கலைக்கழகத்தில் கற்றிருந்தார்.

றோட்டறிக் கழகத்தின் கொழும்பு, கிழக்குப்பிரிவு பல சமூக சேவையினை மேற்கொண்டு வருகிறது. பிரபலங்களை அழைத்து அதன் மூலம் கிடைக்கும் நிதியினைத் தமது சேவைகளுக்குப் பயன்படுத்தி வருகிறது. இதன் ஓர் அங்கமாகவே தற்போது திரிஷாவும் அழைக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர், கிரிக்கெற் நட்சத்திரங்களான வெங்கட்ராகவன், இம்ரான்கான் ஆகியோரையும் 1995 இல் ஐஸ்வர்யராய், கிறிஸ் நாட்டின் உலக அழகி, வெனிசூலாவின் ஜக்குலின் அக்குலிதா ஆகியோரையும், புதுடில்லியிலிருந்து சிறைச்சாலை ஆணையாளர் டாக்டர் கிரண்பேடியையும், இலங்கை முதலீட்டாளர் ராஜ் ராஜரட்ணம் மற்றும் நெவிலி கனகரட்ணம் ஆகியோரையும் இந் நிகழ்வுகளுக்குப் பிரதம விருத்தினர்களாக அழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(18,6)

## தமிழ் விழா

(தாவடி)

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய மாணவர்களின் தமிழ் விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.கல்வி வலயத் தமிழ்த் துறை உதவிக் கல்விப்பணிப் பாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய ஆசிரியமணி எம்.எஸ்.ஸ்ரீதயாளன் இந் நிகழ்வில் பிரமத விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (117)

## நன்கொடை வழங்க நடவடிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட அனைத்துப் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கும் இவ் ஆண்டிற்கான நன்கொடை வழங்கு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில், எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாக 2004 ஆம் ஆண்டின் வருடாந்த கூட்ட அறிக்கை, கணக்கறிக்கை மற்றும் வங்கிப்புத்தகம் என்பவற்றுடன் பொருளாளர் அல்லது செயலாளரை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்திற்கு சமுகம் தரும்படி நகரசபையின் செயலாளர் கேட்டுள்ளார்.

(உ-29)

## மாணிக்கக் கற்களின் தரத்தை உயர்த்த நடவடிக்கை

(கொழும்பு)

கௌடா வகை மாணிக்கக் கற்களைச் சிறந்த முறையில் பட்டைதட்டுவதன் மூலம் உயர்ந்த தரத்தைப் பெற்றுக்கொள்ள தேசிய மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகாரசபை தயாராகி வருகிறது.

மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பான ஆய்வுகள் மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இதற்கான உதவிகள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன. அனேகமான மாணிக்கக்கல் வியாபாரிகள் கௌடா வகை மாணிக்கக் கற்களைத் தரம் குறைந்ததாகவே கணித்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே இவ்வகையான மாணிக்கக் கற்களை பட்டை தீட்டி தரம் உயர்த்துவதற்குரிய தொழில்நுட்பங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் தலைவர் அசோக ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (உ-18,61)

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னை ஆலய வருடாந்தத் திருவிழாவில் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் இடம்பெறவுள்ளது.


(உ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் ஆலய சொர்ணாம்பிகை தேவி அம்பாளின் ஆடிப்பூர மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இவ்விழாவில் எதிர்வரும் 20 ஆம் திகதி தேரும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. (10)




வண். வடமேற்கு-ஆனைக்கோட்டை (கொக்குவில்)

ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலயம்

தாரண வருடம் - 2004

மஹோற்ஷவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

இலங்காபுரியின் வடபால் ஆனைக்கோட்டை மாநகரில் அமைந்துள்ள லலிதா மகா திரிபுர சுந்தரி சகலகலாவல்லி ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாளின் மஹோற்ஷவம் நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆனி மாதம் 28ஆம் நாள் (12.07.2004) திங்கட்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி பத்தாம் நாளான ஆடி மாதம் (21.07.2004) புதன்கிழமை பூர தினத்தன்று தீர்த்தோற்ஷவத்துடன் நிறைவு பெற அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது.

விசேட உற்சவ தினங்கள்

12-07-2004 திங்கள் காலை 11.00 மணி கொடியேற்றம்
13-07-2004 செவ்வாய் காலை 10.00 மணி பூச்சொரியும் திருவிழா
14-07-2004 புதன் காலை 10.00 மணி வேதபாராயணத் திருவிழா
15-07-2004 வியாழன் மாலை 08.00 மணி கையிலாசவாகனம்
16-07-2004 வெள்ளிகாலை 10.00 மணி பக்திமுத்தி பாவன உற்சவம்
17-07-2004 சனி காலை 10.00 மணி சிவலிங்க சாத்துப்படி
18-07-2004 ஞாயிறு மாலை 08. 00 மணி குதிரை வாகனம்
19-07-2004 திங்கள் மாலை 08.00 மணி சப்பரத் திருவிழா
20-07-2004 செவ்வாய் காலை 10.00 மணி இரதோற்ஷவம்
21-07-2004 புதன் காலை 10.00 மணி தீர்த்தோற்ஷவம்
மாலை 03.00மணி கொடியிறக்க வைபவம்
22-07-2004 வியாழன் மாலை 03.00 மணி பூங்காவனம்

மஹோற்ஷவ குரு - தேவஸ்தான குரு
பிரதிஸ்டா பிரதம குரு - ஈசான சிவாச்சாரியார்
சிவாகம கிரியாதத்துவ நிதி
சிவஸ்ரீ இரங்க. வரதராஜக் குருக்கள்

ஆலய நித்திய பூசகர்:
வரத. கோபாலகிருஷ்ணசர்மா
அரவிந்தசர்மா

தினமும் காலை அபிஷேகம் ~ 08.00 மணி
வசந்த மண்டப பூஜை ~ 10.00 மணி
மாலை பூஜை ~ 05.30 மணி
வசந்த மண்டப பூஜை ~ 06.30 மணி

நித்திய சாத்துப்படி: சு.ராமமூர்த்தி (இணுவில்)
நித்திய மேளம்: N.R.நிர்மலன் குழு (கோண்டாவில்)

அடியார்கள் அபிஷேகத்திற்குரிய பால், தயிர், இளநீர், பூக்கள், பூமாலை போன்றவற்றை வழங்கி அம்பிகையின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

அடியார்கள் அனைவரும் வருக! அம்பிகையின் அருளைப்பெறுக.

சுபம்

மேற்படி தேவஸ்தானம்
வண்.வடமேற்கு,
ஆனைக்கோட்டை,
கொக்குவில். (c-364)

இங்ஙனம்
தர்மகர்த்தா சபையும்,
இந்து இளைஞர் மன்றமும்
உபயகாரர்களும்.

விளம்பர அனுசரணை





மகாநதி
ஜுவல்லறி
MAKANATHY JEWLLERY
72A
Kasthuriar Road,
Jaffna.
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### மாகாண சபைத் தேர்தல் முடிவுகள்

# அநேகமான தொகுதிகளில் ஐ.ம.சு.முன்னணி வெற்றி

நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக இது வரை அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்னணியில் உள்ளது.

இதுவரை சுமார் 106 தேர்தல் தொகுதிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதுவரை அறிவித்த முடிவுகளின்படி 8 தேர்தல் தொகுதிகளைத் தவிர ஏனைய தொகுதிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே வெற்றி பெற்றிருக்கிறது.

மத்திய கொழும்பு, கொழும்பு மேற்கு, தெஹிவளை, ஹிங்குராங்வத்தை, மகநுவர, பாத்ததும்பர, கொத்மலை, ஹேவாநற்ற ஆகிய தொகுதிகளிலேயே ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது.

மொனறாகலை, ஹம்பாந்தோட்டை, பதுளை, மாத்தறை, களுத்துறை, பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்றிருக்கிறது.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 8 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 4 ஆசனங்களையும்,

மொனறாகலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 7 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 3 ஆசனங்களையும்,

அநுராதபுரம் மாவட்டத்தில், ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு 14 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 6 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும்,

பொலநறுவை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 6 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 4 ஆசனங்களையும் கைப்பற்றியிருக்கின்றன.

மாத்தறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 12 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 6 ஆசனங்களையும்,

பதுளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 12 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 8 ஆசனங்களையும் மலையக மக்கள் முன்னணி 1 ஆசனத்தையும்,

களுத்துறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 12 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 7 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும் பெற்றிருக்கிறன.

(18)

### வாழைச்சேனையில்

# ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது துப்பாக்கிப் பிரயோகம்

வாழைச்சேனை ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் மீது நேற்றுமுன் தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது அலுவலகத்திலிருந்தும் எதிர்த் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும், இருதரப்பினருக்கும் இடையில் சிறிது நேரம் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருப்பதாகவும் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து தேடுதல் நடத்தப்பட்டது. ஆனால் இதன் போது ஒருவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கிழக்குப் பிரதேசங்களில் அண்மைக்காலமாகத் துப்பாக்கிப் பிரயோகம் உட்பட வன்முறைச் சம்பவங்கள் பலவும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 2004/2005 ஆம் கல்வியாண்டிற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவிருப்பதால் இவ் ஆசிரிய மாணவர்களைத் தவறாது விரிவுரைக்குச் சமுகமளிக்குமாறு கலாசாலை அதிபர் கேட்டுள்ளார். (121)

# மா. சபை தேர்தல் செயற்பாடுகள் இம்முறை ஒப்பீட்டளவில் குறைவு

### பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை அகற்றுவதற்கும், மாகாண சபை வேட்பாளர்களுக்கு பிரசாத்திற்குமென 7.8 மில்லியன் ரூபாக்கள் வழங்கப்பட்டிருப்பினும் அவர்கள் மேற்கொள்ளும் முறையற்ற சுவரொட்டி பிரசாரங்களுக்கெதிராக பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென தேர்தல் கண்காணிப்புக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

சுவரொட்களை அகற்றுவதற்கென தேர்தல் ஆணையாளர் 7.8 மில்லியன் ரூபாக்களை வழங்கியிருந்ததுடன் கூடுதல் அதிகாரத்தையும் பொலிஸாருக்கு வழங்கியிருந்தார். இப்பணியைப் பொலிஸார் சரியாக மேற்கொள்ளவில்லை என பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் கிங்ஸ்லி ரொட்றிகோ தெரிவித்துள்ளார்.

பொலிஸார் வேட்பாளர்கள் மேற்கொள்ளும் தவறான செயல்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த ஏப்ரல்-2ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது சுவரொட்டிப் பிரசாரத்திற்கெதிராக நாட்டிலுள்ள 11 பொலிஸ் நிலையங்கள் சட்டநடவடிக்கை எடுத்திருந்தன.

ஆனால் மாகாண சபைத்தேர்தல்களின் போது எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதேவேளை, தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக, வேட்பாளர்கள் வாகனங்களை தொடர்ந்தும் பயன்படுத்துவது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் பல பிரச்சினைகளை எதிர் நோக்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேட்பாளர்கள் 10மில்லியன் ரூபாக்களை செலவழித்துள்ளனர். மாகாண சபைத் தேர்தல்களுக்கான பிரசாரங்கள் ஜூலை 7ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவுறும் என அறிவுறுத்தப்பட்டிருப்பினும் அதன்பின்னரும் சில வேட்பாளர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.


இது தொடர்பில், அரச ஊடகங்கள் மட்டுமன்றி தனியார் ஊடகங்களும் விளம்பரங்களை ஒளிபரப்பியிருந்தன எனக் குற்றஞ்சாட்டியுள்ள கிங்ஸ்லிரொட்றிகோ, இம்முறை மாகாண சபைத் தேர்தல்களில் தேர்தல் செயற்பாடுகள் ஒப்பீட்டளவில் மிகக் குறைந்தளவே இடம்பெற்றுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். (18,6)

### யாழ்.பிரதேச இராணுவத்தினரின்

# கெலிப்சோ இசைக் குழுக்களிடையே விசேட போட்டி நிகழ்வுகள்

(பலாலி)

யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையக கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எம்.டி.எஸ்.சுசில் சந்திரபாலவின் ஆலோசனையின்







பேரில், யாழ்.பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள படைப்பிரிவில் உள்ள கெலிப்சோ இசைக்குழுவினர் இடையே கடந்த 9 ஆம் திகதி தலைமையகத்தில் போட்டியொன்று நடாத்தப்பட்டது.

இதற்காக படைப்பிரிவில் இருந்து 9இசைக்குழுக்கள் போட்டியில் பங்குபற்றியதுடன், இறுதிப் போட்டிக்காக முதலாவது கஜபாகு படைப்பிரிவு 4ஆவது கஜபாகு படைப்பிரிவு, 3ஆவது விஜயபாகு படைப்பிரிவு, 10ஆவது கெமுனு படைப்பிரிவு ஆகியன தெரிவுசெய்யப்பட்டன.

இதன் இறுதிப் போட்டி யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைதலைமையகத்தில் தளபதி தலைமையில் நடைபெற்றது. சகல குழுக்களையும் விட 4ஆவது கஜபாகு குழுவினர் இதில் வெற்றிபெற்றனர். இரண்டாவது இடத்தை 3ஆவது விஜயபாகு குழுவினரும், மூன்றாம் இடத்தை 10 ஆவது கெமுனு குழுவினரும் பெற்றுக்கொண்டனர்.


வெற்றியீட்டியவர்களுக்கு பெறுமதிமிக்க இசைவாத்தியக் கருவிகள் ஏன்கா ரவல்ஸ் நிறவனத்தின் தலைவர் நில்மின் நாணயக்கார மற்றும் வடக்குப் பிராந்திய உதவி பொலிஸ்பதி ஜயந்த பரனாத்தல ஆகியோரால் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அதன் போது வெற்றியீட்டியோருக்கு யாழ்.தளபதி பரிசில்களை வழங்கினார். இந்நிகழ்வில் கட்டளையிடும் அதிகாரிகள், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் இராணுவவீரர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



# ஜூலை 20ல் காத்மண்டுவில் சார்க் அமைச்சர்கள் கூட்டம்

(காத்மண்டு)

சார்க் அமைப்பின் வெளியுறவு அமைச்சர்களின் 3 நாள் கூட்டம் வருகின்ற 20-ம் தேதி காத்மாண்டு நகரில் ஆரம்பமாகிறது.



சார்க் அமைப்பில் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, மாலதீவு , நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகள் உள்ளன. இந்த அமைப்பின் உச்சிமாநாடு கடந்த ஜனவரி மாதம் இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது.

அதன் பின்னர் சார்க் அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் 3 நாள் கூட்டம் வருகினற 20-ம் தேதி காத்மண்டுவில் ஆரம்பமாகிறது. சார்க் நாடுகளிடையே உள்ள பொருளாதார பிரச்சினைகள், ஏழ்மை ஒழிப்பு ஆகியவைகள் மீது இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட உள்ளது என்று சார்க் அமைப்பு தலைமைச் செயலாளர் ரஹிம் நேற்று கார்த்மாண்டுவில் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் கூறினார்.

அமைச்சர்கள் கூட்டத்திற்கு பின்னர் வெளியுறவு செயலாளர்கள் கூட்டம் 18-ம் தேதி ஆரம்பமாகி 2 நாட்கள் நடைபெறுகிறது. அதற்கு முன்னதாக இணை செயலாளர்கள் மட்டத்திலான நிகழ்ச்சி தயாரிப்பு கமிட்டி கூட்டம் 16திகதி முதல் 2 நாட்கள் நடைபெறுகிறது.

இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சார்க் உச்சிமாநாட்டின் போது தெற்காசிய தாராள வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் விதிமுறைகளை சேர்ப்பது குறித்து விவாதிக்கப்படும். ஏழ்மை ஒழிப்பு நிதிக்கு ரூ.500 கோடி நிதி உதவி அளிக்க இந்தியா உறுதி அளித்து உள்ளது என்றும் ரஹிம் மேலும் கூறினார். (யே)

# ரெல் அவிவ் தாக்குதலில் ஒருவர் பலி 14 பேர் காயம்

(ரெல்அவிவ்)

இஸ்ரேலின் தலைநகர் ரெல் அவிவில் நேற்றுக் காலை இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் ஒருவர் கொள்ளப்பட்டதுடன் பதினான்கு பேர் காயமடைந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



மிக நீண்ட அமைதிக்குப் பிறகு ரெல் அவிவின் ஹார் சியோன் வீதியில் அதிகாலை ஏழு மணியலவில் இடம் பெற்ற இக் குண்டு வெடிப்பு இஸ்ரேலுக்கு ஆத்திரததை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் இடம் பெற்ற இரட்டைத் தற்கொளைத் தாக்குதலில் சுமார் இருபத்து மூன்று இஸ்ரேலியர்கள் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. அந்தப்பகுதியிலேயே இக் குண்டு வெடிப்புச் சம்பவமும் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (யே)

# பிலிப்பைன்ஸ் கைதிக்கு காலக்கெடு நீடிப்பு

(மணிலா)

ஈராக் தீவிரவாதிகளால் பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்டுள்ள அஞ்செலோடிலா குரூஸ் என்பவரின் விடுதலைக்கான காலக் கெடுவை மேலும் 24 மணித்தியாலங்களால் தீவிரவாதிகள் நீடித்திருக்கிறனர்.

இதன்படி நேற்று ஞாயிறு மாலை வரை இந் நீடிப்புச் செல்லுபடி யாகும் மேற்படி பணயக் கைதி ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டு விட்டதாகவும் அவர் வீடு திரும்பும் ஆயத்தங்கள் நடைபெறுவதாகவும் ஜனாதிபதி குளோரியா அஞ்சலோவின் மனைவியிடம் தெரிவித்திருந்தார்.




ஆனால் மேலும் ஒரு புதிய நிபந்தனையுடன் அஞ்சலோவின் விடுதலைக் கான காலக் கெடுவை தீவிரவாதிகள் நீடித்திருப்பதோடு அவர் விடுதலை செய்யப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மங்கி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அஞ்சலோ ஈராக்கின் நிர்மானப்பணியில் ஈடுபடும் நிறுவன மொன்றில் ட்ரக் சாரதியாகக் பணியாற்றியவர். (யே)

# ஆயுதக் கலாசாரத்தைக் கைவிடுமாறு ஆப்கான் உலமா சபை வேண்டுகோள்

(காபூல்)

காபூலில் கூடிய ஆப்கானிஸ்தான் முஸ்லிம்களின் உலமா சபை அந்நாட்டவருக்கு விடுத்துள்ள வேண்டு கோளில் ஆயுதக் கலாசாரத்தைக் கைவிட்டு நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணையுமாறு கேட்டுள்ளது.



ஆப்கானில் தொடரும் ஆயுத வன்முறைகளால் தேர்தல்கள் பின் போடப்படுவதும் இரண்டு தாசாப்தகால வரலாறு ஆயுதக் கலாசாரத்தை ஒரு வாழ்க்கை முறையாகவே ஆப்கானில் தோற்று வித்திருப்பதாகவும் விசனித்திருக்கும் உலமா சபை, அக்கலாசாரத்தைக் கைவிட்டு ஜனநாயக விழுமியங்களைப் பேண அந்நாட்டவருக்கு அழைப்பு விடுத்துள்ளது.

மேலும் ஆப்கானிஸ்தானின் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து ஆயுதங்களை வைத்திருப்போர் அதனைக் கையளித்து சிவில் வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும்மென்றும் உலமா சபை அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பு ஹமீட் கராஸியின் அரசாங்கத்திற்கு உற்சாகத்தைக் கொடுத்திருப்பதுடன், மேற்குலகின் கவனத்தையும் ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (யே)

# ரஷ்ய நாட்டு மக்களுக்கு பாப்பரசரின் அன்பளிப்பு

(வத்திக்கான்)

ஒரு நல்லெண்ணத்தின் அடையாலமாக ரஷ்ய நாட்டவர் ஒருவரால் சுமார் முந்நூறு வருடங்களுக்கு முன்னர் வரையப்பட்ட யேசுபாலகனைத் தாங்கிய மரியாளின் புனிதமான உருவப்படம் ஒன்றை பரிசுத்த பாப்பரசர் ரஷ்ய நாட்டு மக்களுக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

சுமார் ஆயிரம் வருடகாலமாக வத்திக்கானின் தல்லமையை நிராகரித்து கிழக்குபிராந்தியத்தின் பழமை வாதக் கிறிஸ்தவர்கள் ஆயர் பார்த்தொலோமேயு தலைமையில் இயங்கி வருகின்றனர். இப் பிரிவினரை



ரோமன் கத்தோலிக்க திருச்சபை யோடு இணைக்கும் முயற்சிகளில் வாத்திக்கான் இறங்கியுள்ளது.

ஆயினும் பாப்பரசரின் எண்ணம் நிறைவேறாது என்று ரஷ்யப் பழமை வாதக் கிறிஷ்தவத் தலைமைகள் முரண்படுகின்றன. அடுத்த மாதம் மேற்படி திருவுருவப்படம் ரஷ்யாவுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.(யே)

WORLD NEWS
உலக தரிசனம்

# ஜப்பான் மேலவைத் தேர்தலில் பிரதமரின் கட்சி தேறுமா?

(ரோக்கியோ)

ஜப்பானின் பாரளுமன்ற மேலவைக்கான தேர்தல்களில் அந்நாட்டு மக்கள் நேற்று வாக்களித்தனர். இத்தேர் தலில் 51 ஆசனங்களைப் பிரதமர் கொய்சூமியின் கட்சி பெறாது போனால் அவர் மிகுந்த நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என்று அறிவிக்கப்படுகிறது.



ஈராக் பிரச்சினையில் நாடாளுமன்றத்தைக் கலந்து கொள்ளாமல் கொய்சூமி அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஆதரித்தமையால் ஜப்பானியர் தமக்குள் பிளவுபட்டுள்ளனர், தவிரவும் வயோதிபர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் தொடர்பில் பிரதமரின் லிபரல் ஜனநாயக கட்சியிடம் சிறந்த கொள்கைகள் எதுவுமில்லை என்றும் குற்றம் சுமத்தப்படுகிறது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் நாட்டின் 80 சத வீதமானவர்களின் ஆதரவுடன் ஆட்சி பீடமேறிய யுனிச்சீரோ கொய்சூமியின், செல்வாக்கு சரி அரைவாசியாகக் குறைந்துள்ளது ஆயினும் அவருக்கு மாற்றீடாகத் திறமையுடன் செயற்படக் கூடியவர்கள் எவரும் இப்பொழுது ஜப்பான் பாராளுமன்றில் இல்லை என்றும் கூறப்படுகிறது. (யே)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

கணிதம் I ஆக்கம் : திரு. க. ஆதித்தன் கணித ஆசிரியர்,
மணி - 1 யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை. சுன்னாகம்.

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

1. $A = \{2,3,5,7,11,13\}$ எனின் $n(A)$ இன் பெறுமதி காண்க.

2. சுருக்குக: $6\frac{1}{2} - 2\frac{1}{4}$

3. ஒருவருக்கு $1\frac{1}{2}$ **Kg** அரிசி ஒரு வாரத்திற்கு தேவை. 4 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு 30 **Kg** அரிசி எத்தனை வாரத்திற்கு போதுமானது?

4. $48 \times 4 = 672$ எனின் இதனைப் பயன்படுத்தி $\frac{6.72}{4.8}$ இன் பெறுமானத்தைக் காண்க.


5. ஓர் ஒழுங்கான அறுகோணியின் அகக்கோணம் ஒன்றின் பெறுமானத்தைக் காண்க.

6. $2x^{-3}$ என்பதை நேர்ச்சுட்டியில் தருக.

7. அகக்கோணங்கள் செங்கோணங்களாகவும் மூலைவிட்டங்கள் ஒன்றை ஒன்று செங்கோணத்தில் இருசமகூறிடும் நாற்பக்கலின் சிறப்புப் பெயர் யாது?

8. 40 மாணவரைக் கொண்ட வகுப்பு ஒன்றில் 26 மாணவர் பரீட்சை ஒன்றில் சித்தியடைந்தனர் எனின் சித்தியடையாத மாணவர் மொத்த மாணவர்களின் என்ன சதவீதம்?

9. காட்டப்பட்டுள்ள உருவில் மிகப்பெரிய கோணத்தைப் பெயரிடுக.





10. $1023_{\text{நான்கு}}$ என்பதை அடி இரண்டில் உள்ள எண்ணாக மாற்றுக.


11. $2^{x+3} = 32$ $x$ இன் பெறுமானத்தைக் காண்க.

12. காரணி அறிவைப் பயன்படுத்தி சுருக்குக. $12.1 \times 11.9$

13. அருகே காட்டப்பட்ட உருவில் நேர்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.





14. காட்டப்பட்டுள்ள உருவில் $x, y$ இன் பெறுமானங்களைக் காண்க.




15. **A, B** என்பவர்களிற்கிடையே 2:5 என்னும் விகிதத்தில் ரூ 2170 ஐப் பங்கிட்டால் **B** பெறும் தொகையைக் காண்க.

16. 8 மாணவர்களின் இடைவயது 25 வருடங்கள் ஆகும். அவர்களுடன் ஒரே வயதுடைய இருவர் சேர்ந்த பொழுது அவர்களின் வயதுகளின் இடை 26 வருடங்களாகக் காணப்பட்டது எனின் புதிதாக சேர்ந்தவர்களின் வயதைக் காண்க.


17. அருகே உள்ள உருவில் வட்டத்தின் மையம் **O, AB** நாண் ஆகும். **ON, BM** இன் நீளங்களைக் காண்க.




18. சுருக்குக. $\frac{1}{4} \div 2$ இன் $\frac{3}{4} + 1$

19. $ab = 15, a + b = 8$ எனின் $a^2 + b^2$ இன் பெறுமானத்தைக் காண்க.


20. **ABCD** ஓர் இணைகரம் ஆகும். $h$ இன் பெறுமானத்தைக் காண்க.




21. $5a - 2b = 11, 2a + b = 8$ என்னும் சமன்பாடுகளில் **a,b** இன் பெறுமானங்களைத் தனித்தனியாக கணிக்காது, **a-b** இன் பெறுமானம் காண்க.

22. $\frac{x+2}{x-2} = \frac{a}{b}$ எனின் x யைக் எழுவாயாக மாற்றுக.

23. பின்வரும் வட்டவரைபு குறித்த ஆண்டு ஒன்றில் அரசினால் செலவிடப்பட்ட பண விரபரத்தைக் காட்டுகின்றது. கல்விக்காக $6 \times 10^4$ மில்லியன் ரூபா செலவிடப்பட்டது எனின் பாதுகாப்புக்கு செலவிட்ட பணத்தைக் காண்க.





24. $y = 3x$ என்னும் நேர்கோட்டிற்கு சமாந்தரமாகவும் (0,2) என்னும் புள்ளிக்கூடாகவும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.

25. $2\ell g\, x + \ell g 4 = 4$ எனின் மடக்கை அட்டவணை பயன்படுத்தாது x இன் பெறுமதியைக் காண்க.

26. மோட்டார் கார் ஒன்று 0830 **h** இல் சுன்னாகத்தில் இருந்து புறப்பட்டு 28 **Km** தூரத்தில் உள்ள முகமாலையை 0905**h** இற்கு சென்றடைந்தது. காரின் வேகத்தை $Kmh^{-1}$ இல் காண்க.

27. தரப்பட்ட உருவில் $B\hat{C}D = 50^0$ $A\hat{D}B = 30^0$ எனில் $A\hat{B}D$ ஐக் காண்க.




28. கணித பாடத்தில் 11 மாணவர்கள் பெற்ற புள்ளிகள் பின்வருமாறு 40, 48, 48, 50, 52, 54, 68, 72, 74, 75, 77. இப்பரம்பலின் காலணை இடைவீச்சைக் காண்க.

29. பெறுமானம் காண்க.

$$2\cos 60^0 + 2\sqrt{2}\sin 45^0 - \sqrt{3}\tan 60^0$$

30. மட்டமான மேசை ஒன்றின் மீது 4 **cm** ஆரையுடைய வளையம் ஒன்று உருட்டப்படுகின்றது. அந்த வளையத்தின் மையத்தின் ஒழுக்கைத் தருக.

**நாளை கணிதம் பகுதி - I இற்கான விடையுடன், பகுதி - II இற்கான வினாக்களும் வெளிவரும்.**

# எதிர்கால விடுதலையை எதிர்கொள்ளும் துணிவு இருந்தால் ஏ-9 பாதையும் எங்களின் வெற்றிப் பாதையே!

## நடுவர் : பொன்.கணேசமூர்த்தி தீர்ப்பு

**ஏ-9** பாதை திறப்பு தமிழர் கலாசாரத்துக்கு விடிவைத் தருமா? அழிவைத் தருமா? என்ற விவாத அரங்கிற்கு நீர்வைமணி, ரசிகலா, கண்ணா, வீ.ஆர். லிங்கம், சசீந்திரா, திருமதி அ.இரகுநாதன் ஆகிய




அறுவரதும் வாதத்தை மிகுந்த கவனத்துடன் கருத்தூன்றிப் படித்துப் பார்த்தேன்.

### விவாத அரங்கு - 3

2 வருடங்களுக்கு முன் பலத்த போரினையும், உயிரிழப்புகளுக்குப் பின்னர் ஏற்பட்டதும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பேரிற் திறக்கப்பட்ட ஏ-9 பாதையானது, குடாநாட்டு மக்களின் வாதப் பிரதிவாதங்களுக்குட் சிக்கி விழிபிதுங்கிக் கொண்டிருப்பது எனக்குத் தெளிவாகவே தெரிகிறது.

இந்தப் பாதை திறக்கப்பட்டதன் பின்னால் வரக்கூடாத்தெல்லாம் இந்த வழியால் வந்து,விரும்பத்தகாததெல்லாவற்றையும் விளைத்து, இழக்கக்கூடாத கலாசாரத்தை இருப்பழியச் செய்கிறது என்பது ஒரு சாராரின் வாதம்.

எந்த இலக்கை நோக்கி இந்தப் பாதை திறக்கப்பட்டதை விரும்பினோமோ அந்த இலக்கு அடிபட்டுப் போக, போலி நாகரிகம், பொருந்தா மயக்கப் போலிகள், அர்த்தமற்ற ஆடம்பரக்கேளிக்கை ஆர்வங்கள்.

மடை திறந்த வெள்ளமாக இந்தப் பாதை வழியே தடையின்றி வந்து மக்கள் அங்காடிகளை நிறைப்பதோடு கலாசாரப் பெறுமதி மிக்க வாழ்வியல் அர்த்தங்களை முற்றாகவே அழித்துவிட்டது என்பது அவர்களின் ஆதங்கமாக இருக்கிறது.

அழிந்து கொண்டிருக்கின்ற தமிழ் மாணவத்தின் கல்வி ஆர்வம், மதில்களிலே குந்தியிருந்து அவப்பொழுதுகழிக்கும் இளையவரின் இலக்கற்ற மனப்போக்கு, நவீன தொடர்பாடல், ஊடகச்சாதனங்களின் மிதமிஞ்சிய பெருக்கத்தால் அழிந்துகொண்டிருக்கும் விருந்தோம்பல், பண்பாள்வச் சிதைவு இவை யெல்லாம் ஏ-9 பாதை திறப்பின் எதிர் விளைவாக இருக்கின்றன என்றும் வழிப்பறிகளும், கேலிப் பேச்சுகளும், பாலியல் வன்முறைகளும், பண்பு துறந்த நடத்தைகளும், பாதை திறப்பினால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பாதகங்களே என்றும் இந்தச் சாரார் தமது வாதங்களை முன்வைக்கின்றார்கள்.

ஏ-9 பாதை மூடப்பட்டிருந்த காலத்தில் முடக்கப்பட்டிருந்த தமிழ் மாணவர்களின் திறமைகள் அது திறக்கப்பட்ட பின்னர்தான் ஒளிவிடத் தொடங்கியுள்ளன. ஆறுமணிக்குப் பின்னர் வீட்டுக்குள் அடைபட்டுக்கிடந்தவர்கள், சொந்த பந்தங்களின் தொடர்புகளைத் தொலைத்துத் துன்பப்பட்டவர்கள், மருத்துவ, கல்வித் துண்டிப்பால் இடர்ப்பட்டவர்கள், தொழில்நுட்பத் தொடர்பாடற் சாதனங்களின்றித் தனிமைப்பட்டவராய்த் துடித்தவர்கள். ஏ-9 பாதை திறப்புக்குப் பின்னர் ஒளிகண்டவராய் மகிழ்ச்சியுறுகின்றனர் என்று மறு சாரார் வாதாடுகின்றனர்.

ஒடுங்கிக் கிடந்த தமிழர்களின் திறன் இந்தப் பாதை திறப்பிற்குப் பின்தானே வடகிழக்கைத் தாண்டி ஒளிர்கிறது. நுண்கலை, தொழில்நுட்ப நிபுணர்களின் வருகை, கண்காட்சிகள், கருத்தரங்குகள் என்று அறிவியற் கல கலப்பு பாதை திறப்பாற் தானே சாத்தியமாயிற்று.

போரின் கொடுமையும், இன, மத வேறுபாடுகளும், பரஸ்பரச் சந்தேகப் பார்வைகளும் ஓரளவுக்காவது நீங்கி, எங்கும் எவரும் எப்போதும் போகலாம், பார்க்கலாம், பழகலாம் என்ற நிலையைப் பாதை திறப்புத் தானே சாத்தியமாக்கிற்று. பிரிந்தவர் சேரவும், அறிவியல் துறைசார் நூல்கள், கருவிகள், வாய்ப்புக்கள் குடாநாட்டுக்குள் நுழையவும் பாதை திறப்புத் தானே வழிவகுத்தது என்கிறார்கள் இவர்கள்.

நெடிய போரினால் அனைத்து வகையிலும் புண்பட்டுப் போயுள்ள தமிழ்மக்கள் கருத்தூன்றிப் படித்து மனம்விட்டுப்பேசி, சிந்தித்து முடிவெடுக்கவேண்டிய தேவையானது இன்றைய நிலையைத் தவிர்க்க முடியாததாகின்றது என்று நான் நினைக்கின்றேன்.

இந்தப் பாதை திறப்பினால் விரும்பத்தகாதவை எல்லாம் வீச்சோடு பாய்ந்து வருகின்றன என்பது உண்மை தான். அங்காடிகளிற் குவிந்து கிடந்து ஆளை மயக்கும் நவீன தொழில்நுட்பத் தகவற் கருவிகளும், திமிரைச் செயற்கையாக வீங்கிக்கிடக்கும் வாழ்வியல் மாற்றங்களும், ஏற்கெனவே நொந்து சுருங்கி மெல்ல மெல்லத் தேய்ந்து கொண்டிருக்கும் வாழையடி வாழைப் பண்பாட்டுக் கருவின்மீது பெருஞ் செல்வாக்குச் செலுத்த முனைவதால் தமிழர் மத்தியில் ஒரு தலைச்சுற்றல் மாற்றம் நிகழக் காரணமாகிறது என்பதும் உண்மைதான். ஆனால் அதே பாதையி னூடாக, விரும்பத்தகுந்தவையும் வீச்சாக வருவதையும் மறுக்க முடியாது. இழந்துபோன உறவுகளின் வருகை, குடா நாட்டுக்குட்குடங்கி மாலை 6 மணிக்குள் கூட்டுக்குள் அடைந்த தமிழர்கள் உலகை உள்ள படி தரிசிக்கும் வாய்ப்பு, இதே பாதையினூடாக வந்து தான் நம்பிக்கைக் கதிர்களால் தமிழர் மேனி யில் தடவுகிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஏ -9 பாதை திறப்பானது பழந்தமிழ்க் கலாசாரத் தைப் பாழடிக்கிறது என்பவர்களின் ஆதங்கம் புரிந்து கொள்ளப்படவேண்டியதே. அதேபோல, நொந்து கிடக்கும் தமிழர் வாழ்வின் நோ தவிர்க்கும் மருந்து களும் இந்தப் பாதை வழியே வருகின்றன என்பதும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதே.

தமிழர் கலாசாரம் இந்தப் பாதை திறப்புக்கு முன்னர் எத்துணை ஆரோக்கியமாக இருந்தது என்பது

**ஏ-9**
**பாதைத் திறப்பு தமிழர் கலாசாரத்திற்கு விடிவைத் தருமா? அழிவைத் தருமா என்ற விவாத அரங்கிற்கான தீர்ப்பை ஈழத்தின் பிரபல எழுத்தாளரும் மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை முகாமையாளருமான பொன்.கணேசமூர்த்தி அவர்கள் முன்வைக்கின்றார்.**


ஆய்வுக்குரியது. (உண்மையைச் சொல்லப்போனால் தமிழர் கலாசாரம், என்று சொல்லப்படுவது தமிழர் கலாசாரம் தானா? என்பதே இன்று ஆய்வுக்குரிய விடயமாகப் பலராலும் பார்க்கப்படுகிறது.) கலாசாரச் சீரழிவு என்பது இந்தப் பாதை திறப்புக்குப் பின்னர் தான் கடும் வேகம் பெற்றுக் கவலைக்குரியவர்களாகத் தமிழர்களை ஆக்குகிறது என்ற வாதமும் ஆய்வுக் குரியதே.

இந்த விவாத அரங்கில் முன்வைக்கப்பட்ட சீரழிவுகள் அல்லது முகிழ் முரண் கலாசாரம், ஏ-9 பாதை திறக்க முன்னரும், திறந்திருந்தபோதும் இருக்கவே செய்தது. மூடப்பட்டிருந்தபோது மூர்க்கம் பெற்றது. இதை முரண்படும் இரண்டு சாராரும் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். கட்டுப்பாடின்றிக் கள்ளத்தனமாக வந்த நீலங்கள், திரவங்கள், கருவிகள் ஆகியவற்றை ஏ-9 பாதை மட்டுமே சுமந்து வருகிறது என்பது முழுமையாக ஏற்கக்கூடும் வாதமன்று. இந்தப் பாதையை மூடிவிட்டால் இவற்றின் வரவு நின்றுவிடும் என்பதும், மூடப்பட்டிருந்த காலத்தில் இவை குடா நாட்டுக்குள் வரவேயில்லை என்பதும் ஏற்கக்கூடிய தன்று. பாதையை மூடிவிட்டால் இவ் விரும்பா விளைவுகள் தடுத்து நிறுத்தப்படும் என்ப தும் சரியான வாதமாகப் படவில்லை.

இன்று நவீன தகவற் தொடர்பு ஊடகங்களால், கருவிகளால் உலகம் சுருங்கிக் கிடக்கிறது. காற்றலை வழியும் கடலலை வழியும் உலகின் எந்த ஒரு மூலையையும் ஒரு நொடிக்குட் கண்முன் நிறுத்திக் கருத்துக்குள் நிறைக்கக்கூடியவை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இவற்றின் தாக்கத்திலிருந்து தப்பிக்கொள்வதற்காக இருண்ட மூலைக்குள் ஒளித்துக்கொள்வதும், சாளரங்களை இறுக மூடிக்கொள்வதும் தமிழர்களை மேலும் மேலும் பலவீனப்படுத்துவதோடு, தனிமைப்படுத்திவிடுமேயன்றி இழந்து கொண்டிருக்கும் பண்பாட்டுவிழுமியங்களைத் தூக்கிநிறுத்த உதவாது என்பதை நாம் உண்மையாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பதும், 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே...' என்பதும் வெற்று வார்த்தைகளல்ல.கரைபுரண்டுவரும் ஆற்றுவெள்ளம் முத்துக்களையும் கலங்கல்களையும் ஒருசேரவே சுமந்துவரும். முத்துகளைத் தூக்கி எறிந்துவிட்டு கிளிஞ் சல் முடிசூடிக்கொள்ள நினைப்பதும், கலங்கல் சுமக் கும் ஆற்றைக் கடலுக்குட் திருப்பிவிடு என்பதும் ஆரோக்கியமான பார்வையுமல்ல அர்த்த முள்ள முடிவுமல்ல.

நாங்கள் மிகவும் நொந்துபோனவர்கள், இருப்புகளைத் தொலைத்து விட்டதால் எமது அடையாளம் எதுவென்பதையே பெருமளவுக்கு மறந்து போயிருப்பவர்கள். அல்லது அடையாளம் இதுவென்று துணிந்து காட்டுவதற்கே அச்சத்தில் இருப்பவர்கள். எங்காவது எங்கள் எதிர்கால எழுச்சிககான ஒளி தெரியுமா? என்று ஏக்கத்தோடு இருப்பவாகள். எனவே ஒற்றைப் பாதையாலும், அது கொண்டு வரும் பழுதுகளாலும் சமூகம் பாழாகிப்போகிறதே என்று ஆற்றைக் கடலுக்குட் திருப்பும் முடிவை எடுக்காமல், நல்லவற்றைப் பற்றிப் பயன் கொள்ளும் அறிவினையும், அல்லவற்றைத் தள்ளிப் பொசுக்கும் திடத்தினையும் நமது இளையவர்களுக்கு அறிவிக்கும்



பணியினை ஆற்றலோடு செய்ய முனைவதே அறிவுடைமை.

அறிவியல் ஒளி பாய்ந்துவருங்காலத் தில் அதன் பாதையை அது எதுவாக இருந்தா லும் தடுப்பதென்பது எம்மைத் தேங்க வைத்துவிடும். பாதையையும் பாதை வழி வரும் தீங்குகளையும் துலக்கத் தொடங்கினால் குலமும் கலாசாரமும் விளக்கம் பெறத் தொடங்கி விடும்.

எனவே ஏ-9 பாதை மூடப்படவேண்டுமா? திறந்திருக்கவேண்டுமா? என்பது இன்றைய பிரச்சினையல்ல... பல்வேறு பாதைகளினூடாகவும் பல்கிப் பெருகிவரும் நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்து , தவிர்ப்பன தவிர்த்து ஏற்பன ஏற்கும் அறிவியற் தகைமையை அறியார்க்கு அறிவிக்கும் கலாசார இயக்கத்தை முடுக்கிவிடுவதொன்றே தேய்ந்து கொண்டிருக்கும் தமிழர் வாழ்வியலைத் தூக்கி நிறுத்துவதற்கான வழியாகும்.

அறிவியல் வழங்கும் அனைத்துக் கருவிகளையும் நாம் பயன்கொண்டே ஆகவேண்டும். இது காலத்தின் வழி. நாம் இதிலிருந்து விலகிக் கொள்ளமுடியாது. விலகினால் தமிழ்க்குலம் விளங்க முடியாது. உலகத்தின் ஓட்டத்திலிருந்து பிடிக்கமுடியாத தூரத்துக்குப் பின்தங்கிவிடுவோம்.

ஏ-9 பாதை ஒரு பாதை மட்டுமே. உலகமும் அது அறிவிக்கும் அறிவியலும். நன்மை, தீமைகளும் ஒருபாதைவழிமட்டும் வருவதில்லை. காற்றுருவும் எங்கேயும் அது நுழைந்து வருகிறது. அதற்குப் பயந்து ஒதுங்கிப் பாதைகளை மூடுவதைவிட, நிமிர்ந்து எதிர்கொண்டு விரும்பத்தகாதவை நுழையும் போது அதன் விலாவினை உடைப்பதும், வேண்டியவை வரும்போது அதைத் தாங்கித் தக்க பயன் கொள்வதும்தான் தமிழரின் வெற்றி, தோல்விகளை நிர்ணயிக்கப்போகிறது வெறும் பாதைகள் அல்ல.

நாங்கள் அகன்ற அறிவோடு எதிர்கால விடுதலையை எதிர்கொள்ளும் துணிச்சலோடு இருந்தால் ஏ-9 பாதை மட்டுமல்ல எந்தப் பாதையும் எங்களின் வெற்றிப்பாதைதான் என்றும் வெற்றியை நோக்கிய முனைப்பின்றி வழிவழி வந்த வாழ்வியலின் பெருமை பற்றிய தெளிவின்றி அதைப் புதுக்கியெடுக்கும் முயற்சியின்றி நாமிருந்தால் ஏ-9 பாதை மட்டுமல்ல எங்கள் தெருக்களின் குச்சுப் பாதைகள் கூட சத்தமில்லாமல் எமது கலாசாரத்தைச் சீரழிக்கும் என்றும் தீர்ப்பளிப்பதோடு வெற்றி நோக்கிய சவால்களைச் சந்திக்கும் வீரம் இளைஞர்களிடம் வீறாக உருவாக வேண்டும் என்ற அவாவையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

### விவாத அரங்கு -4

**விடயம்**

**சமூக, கலாசாரப் பிறழ்விற்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே!**

**நடுவர் : சிவ.சரவணபவன் (சிற்பி)**
(முன்னாள் யா/வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர்)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

*அனுப்பவேண்டிய முகவரி*

விவாத அரங்கு
வலம்புரி
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# காஷ்மீருக்குள் ஊடுருவ முயன்ற

# 10 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை

## எல்லைக் கட்டுப்பாட்டுக்கு அருகே வெவ்வேறு இடங்களில் சம்பவம்

(காஷ்மீர்)

**ஜம்மு - காஷ்மீர் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத்தாண்டி இந்திய எல்லைக்குள் அத்து மீறி ஊடுருவ முயன்ற பத்து பாகிஸ்தான் தீவிரவாதிகள் உட்பட 12 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.**



காஷ்மீர் மாநிலத்திற்குள் தீவிரவாதிகளின் ஊடுவலைத் தடுக்க, கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுப் பகுதியில் இரும்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. இதையும் மீறி, பூஞ்ச் மாவட்டத்தில் கடந்த வெள்ளியன்று இரவு இரும்பு வேலியை வெட்டி பாகிஸ்தான் ஆதரவு லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் ஊடுருவினர்.

கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் இவர்களை கானேதர் - சக்த்ரூ என்ற இடத்தில் உள்ள பள்ளி அருகே மடக்கினர். இரு தரப்புக்கும் இடையே நேற்று முன்தினம் காலை வரை தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில், ஐந்து தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். காயமடைந்த ஒரு இராணுவ வீரரும் பலியானார்.


மேலும், ஒரு தீவிரவாதி நேற்று முன்தினம் மதியம் சுட்டுக் கொல்லப்பட்டார். மொத்தம் ஆறு தீவிரவாதிகள் இதுவரை கொல்லப்பட்டனர். மூன்று இராணுவ வீரர்கள், சிறப்பு பொலிஸ் அதிகாரி ஒருவர் மற்றும் அப்பகுதி மக்கள் சிலரும் காயமடைந்தனர். காயமடைந்த பொதுமக்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் ஷகீன் என்பவர் பூஞ்ச் மாவட்ட லஷ்கர் தீவிரவாதி அமைப்பின் கொமாண்டர். இவர் கராச்சியைச் சேர்ந்தவர். இத் தீவிரவாதிகளிடம் இருந்து ஏராளமான ஆயுதங்கள், வெடிகுண்டுகள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு பூஞ்ச் நகரில் நடந்த மற்றொரு சம்பவத்தில் மூன்று லஷ்கர் - இ-தொய்பா தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாமிற்குள் ஊடுருவ தீவிரவாதிகள் முயற்சித்தபோதே இராணுவத்தினர் நடத்திய பதிலடித் தாக்குதலுக்குத் தப்ப அருகில் உள்ள அல்லா பர் மொகல்லா என்ற இடத்திற்குச் சென்றனர்.

அங்கே, இவர்களை மடக்கிய இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இரு தரப்புக்கும் இடையே நடந்து சண்டையில் மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து இப் பகுதியில் துப்பாக்கிச் சண்டை நடந்து வருகிறது. இவர்களிடம் இருந்து பொலிஸார் ஏகே-96 ரக துப்பாக்கி உட்பட பல பொருட்களைக் கைப்பற்றினர்.

முதன் முறையாகத் தீவிரவாதிகளிடம் இருந்து ஏகே-96 ரக துப் பாக்கியை இராணுவத்தினர் பறிமுதல் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. கத்துவா மாவட்டத்தில் நடந்த மற்றொரு சம்பவததில் ஒரு தீவிரவாதி கொல்லப்பட்டார். ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். தோடா மாவட்டத்தில் தீவிரவாதிகளால் பெண்ணொருவர் கொல்லப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (18)




## மும்பை தொடர் குண்டு வெடிப்பு குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை

(மும்பாய்)

கடந்த 6 ஆண்டுக்கு முன்னர் மும்பை நகரில் இடம்பெற்ற தொடர்ச்சியான குண்டுவெடிப்புத தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய 11பேருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1999 ஆம ஆண்டு காலப் பகுதியில் மும்பையின் முக்கிய இடங்களில் பல குண்டுத்தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம் பெற்றன. இக் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 4 பேர் வரையில் கொல்லப்பட்டிருந்ததுடன், பலர் காயமடைந்திருந்தனர்.

மேற்படி தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய 11 பேருக்கே தற்போது நீதிமன்றத்தால் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், இந்தத் தண்டனையைக் குறைக்கக்கூடாது என்றும் நீதிபதி கடும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேநேரம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மேற்படி 11 பேரும், இந்தத் தாக்குதல் சம்பவங்களுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனவும், இந்தத்தண்டனையைத் தாங்கள் ஏறகப் போவதில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேற்படி 11பேரும் மேன்முறையீடு செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-18)

# இந்தியச் செய்திகள்

## நேரடி அந்நிய முதலீடு அதிகரிப்பு காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு சி.ஐ.டி.யூ. கடும் எச்சரிக்கை

(சென்னை)

விமானப் போக்குவரத்து, காப்புறுதி மற்றும் தொலைத் தொடர்பு போன்ற பல துறைகளில் நேரடி அந்நிய முதலீட்டை அதிகரிக்க முடிவு செய்திருக்கும் காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய அரசு தனது தவறைத் திருத்திக் கொள்ளாவிட்டால், போராட்டம் வெடிப்பது நிச்சயம் என்றும் சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

2004 / 2005 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜட் பாராளுமன்றத்தில் கடந்த வியாழனன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த பட்ஜட் மூலம் சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், கான்டாக்ட் லென்சுகள் மற்றும் இரும்பு போன்ற பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

மேலும், தொலைத்தொடர்பு, காப்புறுதி விமானப் போக்குவரத்து போன்ற பல துறைகளில் நேரடி அந்நிய முதலீட்டை அதிகரிக்கவும் காங்கிரஸ் அரசு முடிவு செய்துள்ளது.

இந்த முடிவுக்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. சி.ஐ.டி.யூ.தொழிற்சங்கமும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது குறித்து சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கத்தின் மேற்கு வங்கத் தலைவர் ஷியாமால் சக்கரவர்த்தி கல்கத்தாவில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்,

மத்திய பட்ஜட்டில் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளைத் நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். இது தொழிலாளர்கள் மற்றும் பாமர மக்களின் நலனை பாதிக்கக்கூடியதாகும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி நகரில் எமது தொழிற்சங்கத்தின் 4 நாள் தேசிய கவுன்சில் கூட்டம் நடைபெறவுள்ளது.

அப்போது மத்திய பட்ஜட் பற்றி விரிவாக ஆலோசிக்கப்படும்.

அதேநேரம், இதற்கு உரிய மாற்றம் செய்யப்படாவிட்டால் போராட்டம் வெடிக்கும் எனினும், எடுத்த எடுப்பிலேயே போராட்டம் நடத்தமாட்டோம். காங்கிரஸ் அரசுடன் பிரச்சினைகளை முதலில் விவாதிப்போம். அதற்கு அரசு அளிக்கும் பதில் திருப்திதராவிட்டால் எங்களது போராட்டம் வெடிக்கும்.

இதேவேளை, விமான நிலையங்களை வெளிநாட்டவரிடம் ஒப்படைத்தால் பாதுகாப்பு நிச்சயம் பாதிக்கப்படும். அதில் நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம். காப்புறுதித் துறையையும் அந்நியரிடம் கொடுக்கக்கூடாது எனத் தெிவித்துள்ளார். (18)

## 'இந்திராவைப் போலவே சோனியா' அமெ. முன்னாள் அமைச்சர் புகழாரம்


(அமெரிக்கா)

அணுசக்தி மற்றும் இந்தியப் பாதுகாப்பு விவகாரங்களில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் கொள்கைகளையே சோனியா பிரதிபலித்தார் என முன்னாள் அமெரிக்க வெளியுறவுத்துணை அமைச்சர் டால்பாட் தெரிவித்தார்.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பில்கிளிண்டன் அமைச்சரவையின் வெளியுறவுத்துணை அமைச்சராக டால்பாட் பணியாற்றினார். "இந்தியா உருவாகிறது" என்ற பெயரில் இவர் தற்போது ஒரு புத்தகம் எழுதியுள்ளார்.

அவரது அப் புத்தகத்தில்,

கடந்த 1999 ஆம் ஆண்டு அமெரிக்கக் குழுவொன்று இந்தியா சென்றது. அங்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சோனியாவைச் சந்தித்தது. அணு ஆயுதம் மற்றும் இந்தியப் பாதுகாப்புக் குறித்துப் பேச்சுத் திரும்பியது. இந்த விஷயத்தில் சோனியா பிடி கொடுக்காமல் பேசினார். இக் கொள்கையில் 'பா.ஜ.க.வுக்கும், காங்கிரஸுக்கும் கருத்துவேறு பாடில்லை' என்று தெளிவாக அவர் கூறினார். இந்திராவைப் போலவே திட்டவட்டமாக அவர் பேசினார் எனக் குறிப்பிட்டுள்ளார். (18)



உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியாவிற்கு வந்த சிங்கப்பூர் பிரதமர் கோசாக் டாங்கை பிரதமர் மன்மோகன் சிங் புதுடில்லியில் கைலாகு கொடுத்து வரவேற்கிறார்.

## தமிழக அரசின் திட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் இடையூறு

(சென்னை)

புதிய தலைமைச் செயலகத்தை சென்னையில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டிருக்கும் தமிழக அரசின் திட்டங்களுக்கு மத்திய அரசின் சுற்றுச்சூழல் அறிக்கை பெரும் இடையூறாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக அரசின் தலைமைச் செயலக நிர்மாணிப்புத் திட்டங்களுக்கு இடைஞ்சலாக மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சு ஏற்கனவே வெளியிட்டிருந்த வரைபு அறிக்கை தற்போது அதிகாரபூர்வமான சுற்றறிக்கையாக அந்த அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இச் சுற்றறிக்கையின் பிரகாரம், ஆயிரம் பேருக்கு மேல் பணி புரியும் அலுவலகம் அல்லது 1 தடவை 50 ஆயிரம் லீற்றர் கழிவு நீரை வெளியேற்றும் வசதியுடைய கட்டடம் அல்லது 50 கோடி பெறுமதிக்கும் மேல் செலவிடப்பட்டு அமைக்கப்படும் கட்டிடம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கு மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சின் அனுமதியும் அங்கீகாரமும் பெறப்பட வேண்டும்.

எனவே இந்த நடைமுறைகளினால் சென்னையில் புதிய தலைமைச் செயலகத்தை தமிழக அரசு நிர்மாணிப்பதில் பெரும் இடையூறுகளும் சிக்கல்களும் இருப்பதாகத் தெரிவிகக்படுகிறது. (உ-18)

## இன்று ஒரு தகவல்

### சகுனமும் சங்கடமும்

ஒரு கடைக்குப் போனேன்.5ரூபா பணத்தைக் கொடுத்து ஒரு தினசரிப் பத்திரிகை கேட்டேன். அவர் உடனே அடுக்கி வைத்திருந்த பத்திரிகையில் ஒன்றைக் எடுத்து என்கையில் கொடுத்தார். வாங்கினேன். மீதிப் பணத்தை எடுத்தார். அதையும் என்னிடம் தரவேண்டுமல்லவா? தரவில்லை. எதிரிலிருந்த பலகையில் வைத்து எடுக்கச் சொன்னார். எப்போதும் அவர் அப்படித்தான் செய்வார். நானும் எடுத்துக் கொண்டு வந்து விடுவேன்.

இவர் ஏன் இப்படிச் செய்கிறார் என்று எனக்கு நீண்ட நாளாகவே சந்தேகம் இருந்து வந்தது. ஒருநாள் அவரிடமே இதைக் கேட்டுவிட்டேன். "நீங்கள் உங்கள் கடைக்கு வந்து பொருட்கள் வாங்குபவர்களுக்கு மீதிச் சில்லறையைக் கொடுக்கும் போது பலகையில் வைத்து விடுகிறீர்களே கையில் கொடுப்பதில்லையே! ஏன் அப்படி? என்று கேட்டேன். "காசைக் கையில் கொடுத்தால் நம்மிடமுள்ள லட்சுமி போய் விடும் சார்" என்றார். அதாவது பணம் செலவாகி விடும் என்று அர்த்தமாம்.

இன்னொரு நண்பர். அவர் ஒருநாள் வழக்கத்திற்கு மாறாக மிகவும் சோகமாக இருந்தார். "ஏன் என்ன ஆயிற்று? ஏன் இப்படிக் கப்பலே கவிழ்ந்தது போல் உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். "கப்பல் கவிழ்ந்திருந்தால் கூட இப்படி கவலைப் படமாட்டேன் சார். வேறு ஒன்று நடந்து விட்டது" என்றார். "என்ன?" என்று கேட்டேன். "என் உச்சந்தலையில் பல்லி ஒன்று விழுந்து விட்டது சார்" என்றார்.

"இதற்காகவா இப்படி?" என்று ஆச்சரியப்பட்டேன். "ஆமாம் பல்லி உச்சந்தலையில் விழுந்தால் பலன் என்ன என்று பஞ்சாங்கத்தில் பார்த்தேன். மரணம் என்று போட்டிருக்கிறது" என்று கூறிக்கொண்டு தொடர்ந்தும் கவலைப்பட ஆரம்பித்து விட்டார். இப்படியும் ஒருவர்.

என்னுடன் வேலை செய்யும் ஒருவர் எப்படித் தெரியுமா? தினமும் வலது காலை வைத்துத் தான் அலுவலகத்திற்குள் வருவார்..என்றாவது தவறுதலாக இடது காலை வைத்து உள்ளே வந்து விட்டாரென்றால் .அன்று முழுதும் மனம் சங்கடப்படுவார். எந்த வேலையும் சரியாக ஓடாது.

சதுரங்கம் விளையாடும் ஒருவர் எப்போது விளையாட உட்கார்ந்தாலும் காயைக் கீழே கைதவறி விழுவது போல் செய்து அதன் பின்பு அதை எடுத்து விளையாடுவார். ஏனென்றால் எப்போதோ ஒரு முறை நிஜமாகவே அது கை தவறிக் கீழே விழுந்திருக்கிறது. அன்று அவர் ஜெயித்து விட்டார். உடனே கை தவறினால் லாபம் என்று பின் அதையே பழக்கமாக்கி விட்டார்.

பூனை குறுக்கே போனால் சகுனம் சரியில்லை என்று நினைப்பவர்கள் உண்டு. ஆனால் ஒருவர் எப்படித் தெரியுமா? அவர் வெளியே கிளம்பும் சமயம் பக்கத்து வீட்டு.ரேடியோவில் "மியாவ் மியாவ் பூனைக் குட்டி" என்று பாட்டுச் சத்தம் கேட்டால் கூட போதும் சகுனம் சரியில்லை என்று பயணத்தை ரத்துச் செய்து விடுவார்.

இவ்வளவும் எதற்குச் சொல்கிறேன் என்றால் அளவுக்கு மீறிய சகுன நம்பிக்கையுடன் பயமும் சேர்ந்து விட்டால் இது ஒருவரது மன நிலையைப் பாதித்து விடும் என்பது மனோத தத்துவ நிபுணர்களின் கருத்து . வாழ்க்கையையே தடுமாற வைத்து விடும்.

பாதுகாப்பற்ற உணர்வு ஒருவித சோர்வு மன நிலை. இதெல்லாம் இதற்குக் காரணமாக அமையலாம். சிலர் மரக்கறி நறுக்கக் கத்தியை எடுத்தாலும் கூட நேரம் சரியாக உள்ளதா என்று பார்த்து விட்டுத்தான் வேலை தொடங்குவார்களாம். அறிவு தான் மனதுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். அப்போது தான் வாழ்வு நன்றாக இருக்கும். அறிவு மனம் சொல்கிற படிகேட்க ஆரம்பித்தால் இடைஞ்சல் தான்.

ஒருவருக்கு 7ம் நம்பர் தான் ராசியான நம்பராம். 7ம் திகதி தான் எந்தக் காரியமும் ஆரம்பிப்பார். 7 வருவது மாதிரி பேரை மாற்றி வைத்துக் கொண்டார். 7மணிக்குத் தான் தினமும் எழுந்திருப்பார். 7ம் நம்பர் வீட்டில் தான் குடியிருக்கிறார். 7ம் திகதி தான் திருமணம் செய்தார்.

அவர் ஒருநாள் குதிரைப் பந்தயத்திற்குப் போனார். குதிரையின் பெயர்களைப் பார்த்தார். ஒரு குதிரையின் பெயர் 7 எழுத்தில் அமைந்திருந்தது. 7தானே இவரது அதிர்ஷ்ட எண். உடனேஅதன் மீது பணம் கட்டினார். பந்தயம் நடந்தது. "என்ன சார் ஆனது?" என்று கேட்டேன். "நான் பணம் கட்டிய எனது குதிரை 7வதாக வந்து சேர்ந்தது" என்றார் சோகமாக.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அரசுக்கு பலம் சேர்த்துள்ளது

## சுசில் பிரேம் ஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நடந்து முடிந்துள்ள மாகாணசபைத் தேர்தல் முடிவுகள், பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுக் கொண்ட ஆணையை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது என சக்தி வலுத்துறை அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளருமான சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்க நிறுவனங்களையும் பொதுச் சொத்துக்களையும் பாதுகாத்து மோசடிகள் வீண் விரயங்கள் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கும் 'பொருளாதாரக் கொள்கை முன்னணி' அண்மையில் வெளியிட்டுள்ளதுடன் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும்,சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சமாதான நடவடிக்கைகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்வதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசுக்கு புதிய பலம் கிடைத்துள்ளது. மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை அடுத்து ஏனைய அரசியல் கட்சிகளும் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க முன் வந்துள்ளன என்றார். (60,10)

# உயர் கல்வி நிலையங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கிட்டும்

## பல்கலை மானிய ஆணைக்குழு உறுதியளிப்பு

(கொழும்பு)

பல்கலைக் கழகம் உள்ளிட்ட உயர் கல்வி நிலையங்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் இவ்வாண்டுக்குள் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுதியளித்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் கல்வி சாரா ஊழியர்களுக்கும் செயலாற்றுத் தரங்களில் உள்ள ஊழியர்களுக்கும் இடையே நிலவும் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்து வைத்தல், பதவி வெற்றிடங்களை நிரப்புதல், விடுதி வசதிகள் ஆகியவற்றில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் உட்பட முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என மானிய ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதனால் நீண்டகாலமாக இருந்து வரும் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பூர்வாங்க வேலைகளை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதற்கான உடன்படிக்கையில் சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்கள் கைச்சாத்திட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர்.

பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அரசாங்கம் அனுமதி அளித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (60,10)

## இராசி பலன்

12.07.2004

(ஆனி 28, திங்கட் கிழமை)

தசமி சித்தம் மு.ப. 8.21 மணி வரை

பரணி மு.ப. 9.48 வரை

இராகுகாலம் 7.29-8.59 மணி வரை

சுபநேரம் 11.59-1.29 மணி வரை

கார்த்திகை விரதம்

**மேடம்**
காரிய அனுகூலம், நல்ல செய்தி, தொழில் ஆர்வம், பெரியோர் ஆதரவு.

**இடபம்**
சுபசெலவு, ஆரோக்கியக் குறைவு, எடுத்த காரியம் தாமதம், இடமாற்றம்.

**மிதுனம்**
நல்ல காரியம், தொழில் முன்னேற்றம், புதிய பொருள் சேர்க்கை, கீர்த்தி.

**கடகம்**
நண்பர் உதவி, காரிய அனுகூலம், சுவாரஸ்யம், உற்சாகம்.

**சிங்கம்**
புதிய திட்டமிடல், சரீர பிரயாசை, தேசாந்திரவாசம், அமைதிக்குறைவு.

**கன்னி**
காரிய தடை, ஆரோக்கியக்குறைவு, போசன சுகம், மனக்கிலேசம்.

**துலாம்**
உறவினர் வருகை, நல்ல சம்பவம், காரிய நன்மை, விருந்துபசாரம்.

**விருச்சிகம்**
எடுத்த காரியம் கைகூடும், பிரயாணசுகம், கௌரவம், உடல் நலம்.

**தனுசு**
முயற்சி கைகூடும், உறவினர் மனஸ்தாபம், வியாபார நன்மை, போசன சுகக்குறைவு.

**மகரம்**
காரிய தாமதம், தொழில் ஆர்வம், புதிய செய்தி, சயன சுகக்குறைவு.

**கும்பம்**
பிரயாண நன்மை, நண்பர் சந்திப்பு, செய்தொழில்நன்மை, கீர்த்தி.

**மீனம்**
அதிக செலவு, காரிய தாமதம், புதிய திருப்பம், பிராயணம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

வெடி பொருட்களை வைத்திருந்த

# ஏழு தமிழ் இளைஞர்கள் முல்லேரியாவில் கைது

(கொழும்பு)

ஹற்றனிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தில் பயணம் செய்த தமிழ் இளைஞர்கள் ஏழு பேரை முல்லேரியாப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பத்தளை நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு முன்னால் வீதித் தடையை ஏற்படுத்தி வாகனங்களை சோதனை நடத்திய பொலிஸாரே இந்த இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடமிருந்து ரி-56 ரகத் தன்னியக்கத் துப்பாக்கியொன்றையும் மூன்று கிரனைட்டுக்களையும் கைப்பற்றியதாக முல்லேரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கமல் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

வெடிபொருட்களை வைத்திருந்த இவ் இளைஞர் பெரிய போரதீவைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸ் அதிகாரி கமல் புஷ்பகுமார மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பொலிஸாரும் தனியான விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர். (18)

# தேர்தல் வன்முறைகளில் ஒருவர் பலி; இருவர் காயம்

(கொழும்பு)

நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல் வன்முறையில் ஒருவர் பலியானதுடன், மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நேற்று முன்தினம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில்,

வாக்களிப்பின் போது மாத்தறையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் வன்முறையின் போது இருவர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளனர். ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கு இடையிலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலேயே இவர்கள் இருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (18)

அரசாங்கப் பாடசாலைகளில்

# மாணவர்களை அனுமதிக்கும் போது அன்பளிப்பு எதனையும் பெறவேண்டாம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் தரம் ஒன்று வகுப்புக்களில் மாணவர்களை அனுமதிக்கும் போது பணம் மற்றும் அன்பளிப்புப் பொருட்களை பெற்றுக் கொள்வது சட்டவிரோதமான செயல் என்பதை கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மீண்டும் நினைவூட்டியுள்ளது.

இதேவேளை வசதிக் கட்டணங்களையும் பாடசாலை அபிவிருத்தி சபைகளுக்கான கொடுப்பனவுகளையும் தவிர்ந்த வேறு எந்தக் கொடுப்பனவுகளையும் வழங்க வேண்டாம் என கல்வி அமைச்சு பெற்றோர்களையும் கேட்டுள்ளது. (60,10)

## அலங்கார உற்சவம்

(பொன்னாலை)

தொல்புரம் மேற்கு மன்னதோட்டம் ஜெகஜோதி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 9 தினங்கள் நடைபெறவுள்ளது. (10,49)

# நினைத்தால் முடியும்



**I can Because I Believe I can**

# மரியா ஷரபோவா!

**பேதுரு யேசுதாசன்**

பொலற்ரீரி ரெனிஸ் அக்கடமியின் வாசலில் தொங்கும் வாசகம் இதுதான். ''என்னால் முடியும் என நான் நம்புகிறேன்! ஆகையினால் என்னால் முடியும்! என்பது தான் அதன் பொருள்.

இந்த வாசகத்தின் தாக்கத்தைக் கடந்த வாரம் இடம்பெற்ற விம்பிள்டன் போட்டிகளின்போது மரியா ஷரபோவாவிடம் காணமுடிந்தது. தோல்வியடையும் நிமிடங்களில் அவரிடம் காணப்பட்ட அமைதியும், அதற்குப் பதிலடி கொடுத்தபொழுது காணப்பட்ட உறுதியும் இதையே வெளிப்படுத்தின.

பொதுவாகத் தன்னம்பிக்கையை அவதூறு செய்யும் அல்லது வலு உற்சாகமாகக் குழிதோண்டிப் புதைக்கும் சக்திகள் நிறைந்த சமூகத்தில் வாழ்கிற நம் இளைய தலைமுறையிடம் வியத்தகு சாதனைகள் அருகி வருவதையிட்டு நாம் கவலை கொள்வதில்லை.

''உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?'', ''எல்லாம் அவன் செயல்'', ''நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்கும்'', ''விரலுக்கேற்ற வீக்கம் வேண்டும்'', ''முக்காலும் காகம் முழுகிக் குழித்தாலும் கொக்காகுமா'', ''மெத்தப் படித்த மூச்சிறு கூழ்ப்பானைக்குள் விழுந்ததாம்'' போன்ற திரு வாசகங்கள் ஷரபோவாவின் தந்தை யூரி ஷரபோவிற்குத் தெரிந்திருக்காது என்று நினைக்கிறேன். அதனால் தான் தன்னுடைய பிள்ளையின் திறமையை அவதானித்த அவர், தன்னிடமிருந்த செல்வங்கள் அனைத்தையும் விற்று அமெரிக்கா போனார்.

அங்கே உலகின் மிகச் சிறந்த ரெனிஸ் அக்கடமியான பொலற்ரீரியில் ஒன்பது வயதில் மகளைச் சேர்த்தார். விசா பிரச்சினை காரணமாக தனது தாயை



ஷரபோவா ரஷ்யாவின் சைபீரியாவிலேயே விட்டுவிட்டு வந்தார்.

அனா குரொணிக்கோவா என்றொரு ரஷ்ய அழகி ரெனிஸ் உலகில் மிக அண்மைக் காலம் வரை கொடி கட்டிப் பறந்தார். ஆனால், உலகம் அவரை வேறு திசைக்கு இழுத்துச் சென்றுவிட்டது. இதே பிரச்சினையில் மரியாவும் அகப்படமாட்டார் என்று கருதுகிறேன் என்று முந்நாள் சம்பியன் பொரிஸ் பெக்கர் எச்சரித்திருக்கிறார்.

ஆனால், போட்டியின்போது ஒவ்வொரு முறையும் கன் கங்கையிடம் கனகு மகிழ்ச்சியைப. அவர் கோளில் தொங்கி, மரியா பகிர்ந்து கொண்ட விதம் அவரது நிழலாய் தந்தை இருப்பதை உணர்த்தியது. பெற்றோரின் அரவணைப்பைப் பெற்ற பிள்ளைகள் சாதிப்பார்கள் என்பதை அது அடித்துக் கூறியது.'

கிராண்ட் சிலாம் பட்டத்தை வென்ற முதலாவது ரஷ்யப் பெண் வீராங்கனை என்ற பெருமை ஷரபோவாவிற்குச் செல்கிறது. மாட்டினா ஹிஞ்சிஸ்ஸிற்கு அடுத்தபடியாக இளவயதில் விம்பிள்டன் பட்டத்தைப் வென்றவர் எனும் பெருமையும் ஷரபோவையே சாரும். பொலற்ரீரி அக்கடமியின் புகழ்மிக்க வீரர்களான அந்ரே அகாஸி , மொனிக்கா செலஸ் ஆகியோருக்குப் பின் ஷரபோவா களத்திற்கு வந்துள்ளார்.


அவரது அழகையும், இளமையையும்விட மனதைக் கவர்ந்த முக்கியமான விடயம் அவரது தன்னம்பிக்கையே! பொலற்ரீரி ரெனிஸ் அக்கடமியின் விருது வாக்கு, கடின உழைப்பு, நம்பிக்கை, போராட்டம் என்பதாகும். தன்னை நம்பாதவன் வேறு எதை நம்பியும் புண்ணியமில்லை என்பதை ஷரபோவாவின் விம்பிள்டன் ஆட்டம் உறுதி செய்தது.

பதினேழு வயதான ஷரபோவா சாதிக்க வேண்டியவை இன்னும் அதிகமிருக்கின்றன. டெனிஸ் வீரர்களின் மெக்கா என்று வருணிக்கப்படும் விம்பிள்டன் கிரீடத்துடன் அவர் அதிபரபரப்பான வி.ஐ.பி. உலகில் காலடி வைக்கிறார். தான் பெற்றது எவ்வளவு பெரிய வெற்றி என்பதைத் தன் தாய்க்கு அறிவிக்கத் தந்தையின் கைத்தொலைபேசியில் முயன்றார். ஆனால் ஏமாற்றமே மிஞ்சியது.

அதனை கென்ற் இளவரசர் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏனெனில் ஷரபோவாவின் வெற்றிக் கிண்ணம் அவாது கையிலேயே அவரிடம் வழங்கப்படுவதற்காக இருந்தது. உலகமே மிகப் பெரிதாகப் போற்றிப் புகழும் விம்பிள்டன் கிண்ணம் டெனிஸ் வீரர்களின்கனவாக விளங்குவது ஏன் என்று சற்றுப் பார்ப்போம்.



இறுதிப் போட்டியின் போது தந்தை யூரி ஷரபோவுடன் மகிழ்சி பரிமாறும் மரியா



ஆண்கள் பிரிவுச் சம்பியன் ரொஜ பெடரருடன் மரியா ஷரபோவா

## விம்பிள்டன் வரலாறு

இங்கிலாந்தின் விம்பிள்டன் மாவட்டத்தில் வருடந்தோறும் இடம்பெறும் ரெனிஸ் சுற்றுப் போட்டிகள், விம்பிள்டன் போட்டிகள் என்று அழைக்கப்படுகின்றன. இது லோன் (**Lawn**) ரெனிஸ் சுற்றுப்போட்டிகள் என்றும் அதிகாரபூர்வமாக அழைக்கப்படுவதும் உண்டு.

உலகின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த நான்கு ரெனிஸ் சுற்றுப் போட்டிகளில் மிகவும் முக்கியம் வாய்ந்தது விம்பிள்டன் போட்டிகளாகும். ஏனையவை அவுஸ்திரேலிய, பிரெஞ்சு மற்றும் அமெரிக்க பகிரங்கப்போட்டிகளாகும்.

விம்பிள்டன் உள்ளிட்ட இந்த நான்கு போட்டிகளும் கிராண்ட் ஸ்லாம் போட்டிகள் என்று அழைக்கப்படுகின்றன. ஒரு வருடத்திலே இந்த நான்கு போட்டிகளிலும் வெற்றிபெறும் வீரர், கிராண்ட் ஸ்லாம் வீரர் என்று அழைக்கப்படுகின்றார். இது மிகவும் அரிதான காரியமாகக் கருதப்படுகிறது.

வருடத்தின் யூன், யூலை மாதங்களில் இடம் பெறும் விம்பிள்டன் போட்டிகள்தான் உலகில் புற்றரையில் விளையாடப்படும் ஒரே கிராண்ட் ஸ்லாம் போட்டியாகும். ரெனிஸ் வீரர்களின் ''மெக்கா'' (**Mecca**) என்று வர்ணிக்கப்படுவது விம்பிள்டனே!

ஆண், பெண் இருபாலருக்குமான தனிப்போட்டிகள் மற்றும் இருபிரிவினருக்குமான இரட்டையர் போட்டிகள் ஆண், பெண் கலப்புப் போட்டிகள் என்பன நடைபெற்றாலும் கூட தனிநபர் போட்டிகளே அதிகபிரபல்யம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

ரெனிஸ் விளையாட்டு இங்கிலாந்திலேயே கண்டு பிடிக்கப்பட்டது. நான்கு கிராணட் ஸ்லாம் போட்டிகளிலும் பழமையானது விம்பிள்டனே! அதிக மதிப்பிற்குரியதும் அதுவே. முதன் முதலில் 1877ஆம் ஆண்டு இங்கிலாந்து விம்பிள்டனின் லோன் இங்லிஷ் லோன் கிளப்பில் ரெனிஸ் சுற்றுப்போட்டி கள் ஆரம்பமாகின. ஏழு வருடங்களின் பிற்பாடு பெண்களுக்கான போட்டிகள் ஆரம் பிக்கப்பட்டன.

பிரித்தானியர் அல்லாத முதல் வெளிநாட்டவர் ஒருவர் விம்பிள்டன் கிண்ணத்தை 1905இல் வென்றார். அவர் அமெரிக்கரான மே சட்டன் ஆவார். அதன் பிற் பாடு வெளிநாட்டு வீரர்கள் தொடர்ச்சியாக விம்பிள்டனை ஆட்சி செய்யத் தொடங்கினர்.

1922 வரையும் நடப்புச் சம்பியன் ,இறுதிப் போட்டியிலேயே கலந்து தனது பட்டத்தைத் தக்கவைக்கப் போட்டியிடும் முறை இருந்தது. ஆனால், அதன் பிற்பாடு எல்லோரும் ஆரம்ப சுற்றுக்களில் இருந்து விளையாடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1940இலிருந்து 1945 வரையும் இரண்டாம் உலகப் போர் காரணமாக விம்பிள்டன் போட்டிகள் இரத்துச் செய்யப்பட்டன. 1940ஆம் ஆண்டு விம்பிள்டன் டெனிஸ் கோட்களில் பிரதானமானதும் இறுதிச் சுற்றுக்கள் நடைபெறுவதுமான மத்திய கோட் ஜேர்மனியின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது.

ஏனைய விளையாட்டுக்களில் இருந்ததைப் போன்று 1960 வரையிலும் தொழில்சார் வீரர்கள் இப்போட்டிகளில் பங்கெடுக்கத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. 1968இல் விம்பிள்டன் போட்டிகள் சகலருக்கும் உரியதாக மாற்றப்பட்டன. விம்பிள்டன் பட்டத்தை வென்ற முதல் கறுப்பர் அமெரிக்கரான ஆதர் ஆஷ் ஆவார்.

1880 தொடக்கம் விம்பிள்டன் பட்டத்தை தொடர்ச்சியாக 7 வருடங்கள் வென்றவர் இங்கிலாந்து வீரரான வில்லி றின்சோ ஆவார். 1993 - 2000 வரையும் வென்றவர், அமெரிக்கரான பீற் சம்ப்ரஸ் ஆவார். பெண்கள் பிரிவில் செக்கோ சிலவாக்கியாவில் பிறந்த அமெரிக்கரான மார்ட்டினா நவரட்டிலோவா 1978க்கும் 1990க்கும் இடையில் ஒன்பது தடவைகள் இப்பட்டத்தை வென்றார். இவ்வருட ஒலிம்பிக் போட்டிகளில் இரட்டையர் பிரிவில் அமெரிக்கா சார்பாகப் போட்டியிடும் 48 வயதான நவரட்டிலோவாவின் விம்பிள்டன் சாதனையே மிகவும் சிறந்ததகாக் கணிக்கப்படுகிறது.

ஜோன் போர்க், ஜிம்மிக் கோணர்ஸ், ஜோன் மைக் என்ரோ, பொறிஸ் பெக்கர், இவான் லெண்டில் , அந்



திரே அகாசி, பீற்சம்ப்ரஸ், மார்ட்டினா நவரட்டிலோவா, ஸ்டெ.ஃ.பி கிரா.ஃ.ப், மொனிக்கா செலஸ், மார்ட்டினா ஹிஞ்சிஸ், செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் கொடி கட்டிப் பறந்த விம்பிள்டனில் புதிய தாரகையாக மரியா ஷரப்போவாவும் இணைந்துள்ளார்.

அவரது அழகுக்கும் திறமைக்கும் பின்னால் உலக மீடியா முழுவதும் அலைந்துதியும் இவ்வேளை 17 வயதேயான இந்த இளம் புயல் விம்பிள்டனை நெடுநாள் ஆட்சிபுரிந்து ரசிகர் மனங்களை ஆளவேண்டும் என நாமும் வாழ்த்துக் கூறுவோம். ★

## இரண்டாவது டெஸ்ட் போட்டி

# அவுஸ்திரேலிய அணி 517

# இலங்கை அணி 342-4

தற்பொழுது கெயின்ஸில் நடைபெற்றுவரும் இலங்கைக்கும் அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான இறுதியும், இரண்டாவதுமான டெஸ்ட் போட்டியில் நேற்றைய தேநீர் இடைவேளையின்போது இலங்கையணி தமது முதல் இன்னிங்ஸில் நான்கு விக்கெற் இழப்பிற்கு 342ஓட்டங்களைப்பெற்றிருந்தனர்.


இலங்கையணி 342ஓட்டங்களுக்கு நான்கு விக்கெற்றை இழந்திருந்தது.

நேற்றைய மதியபோசன இடைவேளை வரையும் இரண்டு விக்கெற் இழப்பிற்கு 280ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கையணி மதியபோசன இடைவேளைக்குப் பின்னர் 133ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்த அதன் தலைவர் மாவன் அத்தப்பத்துவை இழந்தது.


கிளென் மக்ராத்தின் பந்துவீச்சில் அவர் ஆட்டமிழந்தபின் மஹேல ஜயவர்தனாவும் காஸ்பரோவிச்சின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதன்பின்னர் தடுமாறிய இலங்கை அணியை திலகரத்ன டில்ஷானும், சமரவீரவும் தூக்கி நிறுத்தினர். சிறு மழைகாரணமாக தேநீர் இடைவேளை முன்னதாகவே விடப்பட்டது. அவ்வேளை

(யே)

## மேரியன் ஜோன்ஸ் 100மீ.

# தெரிவில் தோல்வியடைந்தார்

உலகின் பிரபல குறுந்தூர ஓட்டங்களையும் நடப்பு ஒலிம்பிக் சம்பியனுமான அமெரிக்க வீராங்கனை மேரியன் ஜோன்ஸ் 100 மீற்றர் ஒலிம்பிக் தெரிவுப் போட்டிகளில் தோல்வியடைந்ததால் ஒலிம்பிக்கில் அப் பிரிவில் பங்கு பற்றும் வாய்ப்பை இழந்தார்.



உடலுக்கு வலுவூட்டும் போதை மருந்தை உபயோகித்தார் எனும் குற்றச்சாட்டுக்களால் பெரிதும் மனமுடைந்து இருந்த அவர் நேற்றைய தெரிவின் இறுதிப் போட்டியில் 11.14 விநாடிகளில் ஓடி ஐந்தாவது இடத்தையே பெற்றார். இனி என்ன செய்யப் போகிறீகள் என்று நிருபர்கள் கேட்டதற்கு எனது மகனுடன் இருக்கப் போகிறேன் என்றார் அவர்.

இருப்பினும் 200 மீற்றர் மற்றும் நீளம்பாய்தல் போட்டிகளிலும் ஒலிம்பிக் சம்பியனாகத் திகழும் ஒரு பிள்ளையின் தாயான மேரியன் ஜோன்ஸ் மேற்படி இரு நிகழ்ச்சிகளிலும் போட்டியிடுவார்.

ஆண்கள் பிரிவில் நடப்பு ஒலிம்பிக் சம்பியனான மௌரீஸ் கிரீன் நான்காவது இடத்தையே பிடித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(யே)

## கோபா அமெரிக்க கால்பந்து

# பெரு எதிர் கொலம்பியா

# வெனிசுலா எதிர் பொலிவியா

கோபா அமெரிக்க கால்பந்து தொடரில் குரூப் 'ஏ' பிரிவில் இன்று நடக்கும் போட்டிகளில் பெரு கொலம்பியாவையும், வெனிசுலா, பொலிவியாவையும் சந்திக்கின்றன. விளையாடிய 2போட்டிகளிலும் வெனிசுலா அணி தோல்வியை சந்தித்ததால், தொடரிலிருந்து வெளியேறிவிட்டது. காலிறுதிக்குத் தகுதிபெறும் இரண்டாவது அணி எது என்பதை இந்தப் போட்டிகள் நிர்ணயிக்கும். இதுவரை நடந்த போட்டிகளின் அடிப்படையில் கொலம்பியா 6, பெரு 4, பொலிவியா 1, வெனிசுலா 0 புள்ளிகளுடன் உள்ளது.



இதேவேளை, காலிறுதிச்சுற்றுக்கு கொலம்பியா அணி தகுதி பெற்றுள்ளது. பெருவில் கோபா அமெரிக்கக் கால்பந்து தொடர் நடக்கிறது. நேற்று நடந்த முதல் லீக் போட்டியில் கொலம்பியா அணி பொலிவியாவை சந்தித்தது. விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் ஏதும் அடிக்கவில்லை. 37வது நிமிடத்தில் கொலம்பியா வீரர் அபெல் அகுய்லர் ப்ரீகிக் வாய்ப்பை வீணாக்கினார். இரண்டவது பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்க கடுமையாகப் போராடின. ஆட்டம்முடியும் தறுவாயில் 89வது நிமிடத்தில் மாற்று வீரராக களமிறங்கிய எடிக்ஸன் பெரேயா தலையால் முட்டி தனது அணிக்கான முதல் கோலை அடித்தார். இதன் மூலம் 1-0 என்ற கோல் கணக்கில் வென்ற கொலம்பியா 6 புள்ளிகளுடன் தொடரில் முதல் அணியாக காலிறுதிக்குத் தகுதி பெற்றது பெருவெற்றி.

மற்றொரு லீக் போட்டியில் பெரு வெனிசுலா அணிகள் மோதின. முதல் பாதியில் இரு அணிகளுமே கோல் அடிக்க முடியவில்லை. இரண்டாவது பாதியில் பெரு அணி தாக்குதல் ஆட்டத்தை தொடர்ந்து ஆட்டத்தின் 62வது நிமிடத்தில் பெரு அணியின் சோலனோ தனது அணிக்கான முதல் கோலை அடித்தார். 72வது நிதிடத்தில் கிடைத்த ப்ரீ கிக் வாய்ப்பை பயன்படுத்தி சோலாகோ இரண்டாவது கோலை அடித்தார். சஜெபர்சன் ப்ரபன் தலையால் முட்டி மூன்றாவது கோலை அடித்தார். இதன் மூலம் பெரு 3-0என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. ஆட்டம் முடிய கடைசி சில நிமிடங்கள் மீதமிருக்கையில் வெனிசுலா அணி ஆறுதல் கோல் அடித்தது. இதன் மூலம் பெரு 3-1என்ற கோல் கணக்கில் வென்றது.

(யே)

## சுவிஸ் பகிரங்க ரெனிஸ்

# இன்றைய இறுதியில் ரொஜர் பெடரர்

இன்று நடைபெறும் சுவிற்சர்லாந்து பகிரங்க ரெனிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் விம்பிள்டன் சம்பியனான ரொஜர் பெடரர் விளையாடுகிறார்.



நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் நடப்புச் சம்பியனான ஜிரி நொவாக்கை அதிர்ச்சித் தோல்விக்கு உள்ளாக்கிய பொற்றிற்ரோ ஸ்ராரேசை 6-3, 3-6,6-3எனும் செற்களில் ரொஜர் தோற்கடித்தார். மழைகாரணமாகச் சிறிது தடைப்பட்டிருந்த இப்போட்டியில் ரொஜர் பெடரர் ஆக்ரோஷமாக ஆடினார்.

ஐந்து செற்கள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இன்றைய இறுதியாட்டம் சீரற்ற காலநிலை காரணமாக மூன்று செற்களாக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தனது சொந்த நாட்டில் விளையாடும் அவருக்கு வெற்றிவாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகிறது.

(யே)

# விளையாட்டுச் செய்திகள்

ATHENS 2004
XXVIII OLYMPICS 13-29 AUGUST
ஒலிம்பிக்கிற்கு இன்னும் 33 தினங்கள்

## நற் வெற் தொடர்

# நியூஸிலாந்து வெற்றி

இங்கிலாந்துப் பயணத்தில் நற் வெற் கிண்ணத்தை வென்று நியூஸிலாந்து அணி நாடு திரும்பியது.



நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை 107ஓட்டங்களால் தோற்கடித்து நியூஸிலாந்து அணி வெற்றிவாகை சூடியது. சுழற்பந்து வீச்சாளர் டானியல் விற்றோரி தனது வாழ்நாளின் சிறந்த பெறுபேறாக 30ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியதோடு முக்கியமான இரண்டு ஆட்டமிழப்புக்களுக்கும் காரணமாக விளங்கினார்.

நியூஸிலாந்தின் 266ஓட்டங்கள் எனும் இலக்கிற்குக் குறிவைத்து ஆடிய மேற்கிந்தியர்கள் ஆரம்பத்தில் சிறப்பாக ஆடிய போதும் 44ஓட்டங்களுடன் டெவோன் ஸ்மித் ரன் அவுட்டான போது அவர்களது விக்கெற்றுக்கள் விழத்தொடங்கின.

தனது 239வது ஒருநாள் போட்டியில் தோற்றிய லாரா 30 ஓட்டங்களை எடுத்தார். கிறிஸ் ஹரிஸ் தனது 200வது ஒருநாள் விக்கெற்றைக் கைப்பற்றினார்.

(யே)

## ஒலிம்பிக் வரலாறு 26

# 1996ல் அட்லாண்டா நகரில்

# இடம்பெற்ற 26வது ஒலிம்பிக்

அமெரிக்காவின் சென்ரெனியல் பூங்காவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இருவர் கொல்லப்பட்டு 100பேர் காயமடைந்தனர். இதனால் அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகள் சோகத்துடன் ஆரம்பிக்கப்பட்டபோதும் மிகத் திறம்பட நடாத்தப்பட்டது. குண்டுவெடிப்புக் காரணமாகப் போக்குவரத்துப் பிரச்சினைகள் எதிர்நோக்கப்பட்டன.

அமெரிக்க நகரான அட்லாண்டாவில் ஒலிம்பிக்சுடர் உலகப் புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரர் முஹமட் அலியால் ஏற்றப்பட்டது. அமெரிக்க வீரர் மைக்கல் ஜோன்சன் 200மீற்றர் மற்றும் 400மீற்றர் ஓட்டப்போட்டிக ளில் தங்கம் வென்றார். 200மீற்றர் தூரத்தை 19.32விநாடி கடந்து புதிய உலக சாதனையையும் அவர் ஏற்படுத்தினார்.



கார்ல் லூயிஸ் நான்காவது தடவையும் ஒலிம்பிக்கில் பங்கு பற்றி நீளம்பாய்தலில் தங்கம் வென்று மொத்தமாக 9பதக்கங்களைத் தனது வாழ்நாளில் சுவீகரித்து ஓய்வுபெற்றார்.

பிரிட்டனின் ஸ்ரீவ் ரெட்கிரேவ் நான்காவது தடவையாகவும் தனது நிகழ்ச்சியில் தொடர்ச்சியாகத் தங்கம் வென்றார். லிண்ட் போர்ட் கிரிஷ்டி இரண்டு தடவை பிழையான ஆரம்பம் காரணமாக 100மீற்றர் போட்டியிலிருந்து நீக்கப்பட்டார். கனடாவின் டொனோவன் பெய்லி 9.84 விநாடிகளில் நூறு மீற்றர் தூரத்தை கடந்து புதிய உலக சாதனை ஏற்படுத்தினார்.

(யே)

மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை
எனை மாட்சித்தாயினும் இல் - குறள்

வலம்புரி

## தமிழர் சால்பை உயர்த்திய இல்லறப் பண்பு

உலகியல் வாழ்க்கை இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பட்ட கொடை. உலகில் எத்தனையோ ஜீவராசிகள் தோன்றியுள்ள போதிலும் மனிதன் மட்டுமே வாழ்க்கையை வாழ்க்கையாக வாழப் பழகிக் கொண்டுள்ளான்.

இவ்வாறு வாழ்க்கையின் தத்துவத்தை உணர்ந்து மனித வாழ்வைத் தீர்மானிப்பதில் இறை நம்பிக்கை முதன்மை பெறுகின்றது. இறைவனை நினைக்கவும்-வணங்கவும் தெரிந்த பிறவி மனிதப் பிறவி என்பதாலேயே ஏனைய ஜீவராசிகளைவிட மனிதப் பிறப்பும், மனித வாழ்வும் சிறப்பும் உயர்வும் பெறுகின்றது.

இத்தகைய புனிதமான மனிதப் பிறவியின் உயர்வை, சிறப்பை உணராதார் இறைவனால் வழங்கப்பட்ட அரிய சந்தர்ப்பத்தை கைவிட்டவர்களாகிவிடுகின்றனர். மனிதத்தின் உயர்வென்பது அவனது வாழ்க்கையின் ஒழுக்கத்தில்-அறச். செயல்களில் தங்கியுள்ளது.

இதனாலேயே உலகின் அனைத்து இனங்களுக்கும் 'இல்வாழ்க்கை' என்பதைப் பற்றித் தமிழ் பண்பாடு மிகத் தெளிவாகக் கூறியுள்ளது.

'இல்வாழ்க்கை' என்ற இல்லறம்பற்றிப் பேசிய பண்பாடுகளில் தமிழ்ப் பண்பாட்டுக்கு நிகராக எதுவுமேயில்லை என்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

வாழ்க்கைத் துணையுடன் இல்வாழ்வான் தனக்குரித்தான அறப்பணிகளை ஆற்றுவதே இல்வாழ்க்கையின் நோக்காகும். இப் பூவுலகில் பிறந்தமனிதன் தனித்து நின்று அறப்பணி புரிவது கடினமானதலினால், தனது அறப்பணிக்காக மங்கலம் என்னும் மனைமாட்சியில் இணைந்து கொள்கிறான்.

இத்தகைய உயரிய இல்வாழ்கை என்பது ஒழுக்க நெறியெனும் வேலியினால் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை தமிழர் சார்பு வலியுறுத்துகின்றது.

இல்வாழ்வானின் கடமைபற்றி வகைகூறிய வள்ளுவப் பெருமான் 'இருந்தோம்பி இல்லவாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' என்றார்.

'விருந்து' என்ற உபசாரம் இல்லறத்தில் மிக உன்னதமான ஒன்றாகும். இங்குதான் ஓர் இனத்தின் பண்பாட்டுப் பரிமாணம் வெளிப்படுத்தப்படுகின்றது. எந்தவொரு இனம் விருந்தோம்பலில் உச்சம் பெற்றுள்ளதோ அந்த இனத்தின் பண்பாட்டுக் கோலங்கள் ஏனைய பண்பாட்டுக் கோலங்களில் நின்று உயர்வு பெற்றதாகும்.

அவ்வகையில் விருந்தோம்பல் பண்பை இல்லறத்துடன் இணைத்து இல்வாழ்க்கைக்கு வகை கூறிய பெருமை தமிழர்களுக்கேயுண்டு. உலகில் இல்லறத்திற்குத் தனியிடம் கொடுத்து, அதன் மகத்துவம்பற்றிப் பேசுகின்ற தமிழ் இனம் உலகில் தல்ல நிமிர்ந்து நிற்பதற்கும், தனித்துவமான இனமாகத் தன்னைக் காட்டிக் கொள்வதற்கும் காரணமாக இருப்பது இல்வாழ்க்கை முறையென்பதை எவருமே மறுத்துவிட முடியாது.

இவ்வாறு தமிழ் இனத்திற்குப் பெருமைதரும் இல்வாழ்க்கைப் பண்பாட்டைக் கடைப்பிடிப்பதில் ஒவ்வொரு தமிழனும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள புலம்பெயர்வு அதனூடான வெளிநாட்டு நாகரிக நுழைவு என்பன எமது பண்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடுமோ என்ற அச்சம் தமிழர் சால்பு உணர்ந்தார் உள்ளங்களை உறுத்துகிறது. எமது பண்பாட்டின் பெருமைகளை மேலை நாட்டவர்கள் வரவேற்று தமக்குள் உள்வாங்கிக் கொள்ளும் போது நாம் எமது முகவரியைத் தொலைத்து விடுவது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

ஏனைய இனங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக விளங்கும் எமது இல்வாழ்க்கைப் பண்பாடு எம்து இனத்தின் பெருமைக்குச் சிகரமாகும்.

அத்தகைய பண்பாட்டை நெறிபிறழாது கடைப்பிடிப்பதன் ஊடாகத் தமிழ் இனத்தின் தனித்துவத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இந்த உண்மையை உணர்ந்து அனைவரும் செயலாற்றுவதும், செயற்படுத்துவம், தமிழுக்குச் செய்கின்ற மிகப் பெரும் பணியாகும்.

# இலங்கைக்கென தேசியக் கொள்கை இல்லாமையே இனப்பிரச்சினை கூர்மையடைய முக்கிய காரணம்

## இந்திய பஞ்சாப் மாநில பொலிஸ் இயக்குநர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்காவின் படைத்துறையிலும், பொலிஸ்துறையிலும் போதியளவில் தமிழர்கள் நியமிக்கப்பட வேண்டுமென இந்தியாவின் பஞ்சாப் மாநில பொலிஸ் இயக்குநர் கே.பி. எஸ்.கில் ஆலோசனை கூறியுள்ளார்.

ஸ்ரீலங்காவின் முக்கியப் பிரதிநிதிகள் மற்றும் படைத்துறைப் பிரிவினருக்கு ஆலோசனை வழங்குவதற்கென 2000 ஆம் ஆணடு தான் இலங்கைக்குச் சென்றிருந்த வேளை பொலிஸ் மற்றும் படைத்துறைகளில் போதுமான அளவு தமிழர்கள் இல்லாதிருந்ததை தான் அவதானித்திருந்தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கென ஒரு தேசியக் கொள்கை இல்லை எனத் தெரிவித்துள்ள அவர், இருக்கின்ற தேசியக் கொளகையும் நம்பிக்கையூட்டும் வகையில் இல்லாமையினாலேயே இனப்பிரச்சினை கூர்மையடைந்தாகவும், இந்தியாவின் ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பஞ்சாப் மாநில பொலிஸ்துறை இயக்குனராகவும், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் விசேட அதிகாரியாகவும் கடமையாற்றும் இவர், இந்தியாவில் தோன்றியிருந்த சீக்கியர்களின் தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் முன்னின்று செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (18)

## பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்குக!

# ஐ.ம.சு.முன்னணி அரசிடம் சிறுபான்மைக் கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை விரைவில் மீள ஆரம்பிக்குமாறு சிறுபான்மைக் கட்சிகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலைத் தொடர்ந்தே இக்கோரிக்கை வலுப்பெற்றுள்ளது.

மேற்படி தாக்குதல் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, இத்தாக்குதலுக்கு யார் பொறுப்பு என்பதனைத் தாம் அறியவில்லை எனவும, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு விரைவில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இக் குண்டுத்தாக்குதலினால் பொதுமக்கள் மீண்டும் அச்சமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் யோகராஜன், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், சமாதானப் பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவது இன்றியமையாததொன்றென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எம்.ரி.ஹசன் அலி தெரிவித்துள்ளார். இருதரப்புக்கும் இடையில் சமரச இணக்கத்தை வலியுறுத்தியுள்ள அஷ்ரப் முன்னணி காங்கிரஸ் தலைவியும் அமைச்சருமான பேரியல் அஸ்ரப், சமாதானத்திற்கான தேவையை மேலும் வலியுறுத்தியுள்ளார். (18)

# மக்களின் ஒற்றுமையும் ஒருமைப்பாடுமே அபிவிருத்திப் பணிகளுக்கு அடித்தளமிடும்

## தென்மராட்சி பிரதேச செயலர் உரை

(யாழ்ப்பாணம்)

பின் தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்ய முற்படும் முன்னர் கிராமத்தில் வாழ்கின்ற அனைத்து மக்கள் மத்தியிலும் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் முதலில் ஏற்பட வேண்டும். ஒருமைப்பாடும் ஒற்றுமையும் இல்லாத கிராமங்களில் எத்தகைய அபிவிருத்தியையோ புனர்வாழ்வுப் பணியையோ மேற்கொள்ள முடியாது.

இவ்வாறு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் மட்டுவில் கிராம அபிவிருத்தி,புனர்வாழ்வு தொடர்பாக மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

சமாதான நீதிபதி க. தவசிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு பெருந்தொகையான பலதரப்பட்டோரும் சமுகமளித்திருந்தனர்.

பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், கிர்ாமிய மட்டத்தில் தற்போது பல்வேறு வகையான பிரச்சினைகள் நிலவி வருகின்றன. கிராமிய மக்கள் மத்தியில் கருத்து முருண்பாடுகள் இருக்கும் பட்சத்தில் அங்கு அரசினாலோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களினாலோ தமது செயல் திட்டங்களை அமுல்படுத்துவது என்பது பெருங் கஸ்டமாக இருக்கின்றது. கிராமிய மட்டத்தில் இருக்கின்ற கருத்து வேறுபாடுள்ளவர்கள் கிராமத்தில் செய்ய முற்படுகின்ற முன்னேற்றகரமான பணிகளுக்கு எதிராக ஆட்சேபித்து வருவது தவிர்க்கப்படவேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் நாகரிகம் வளர்ச்சி பெற்று வருகின்ற போது மக்கள் மத்தியில் மிருகத்தனமும் வேகமாக வளர்ந்து வருவது வேதனைக்குரியது. தென்மராட்சியில் 2000ஆம் ஆணடில இடம் பெற்றயுத்தம் காரணமாக பல கிராமங்கள் பல்வேறு விதமான இழப்புக்களுக்குள்ளும் அழிவுகளுக்குள்ளும் உள்ளாகியுள்ளன. போரினால் ஏற்பட்ட அழிவுகளை உடனடியாகப் புனரமைப்புச் செய்யக் கூடிய வகையில் நிலைமைகள் சீராகவில்லை. அரசின் சமாதான முயற்சிகள் உறுதியடையும் பட்சத்தில் பல்வேறு விதமான புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொள்ளமுடியும்.

எனவே தென்மராட்சிப் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப் படவேண்டிய நிலையிலுள்ள இக் கிராமத்தின் எதிர்கால வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பிரதேச செயலர் என்ற வகையில் நான் என்னாலான உதவிகளைச் செய்வேன் .

எனவே இங்குள்ள மக்கள் நல்ல எண்ணங்களையும் கருத்துக்களையும் வளர்ப்பதில் ஈடுபடவேண்டும எனத் தெரிவித்தார். சாவகச்சேரி தேவலாய பங்குத்தந்தை வணபிதா எஸ். ரவிச்சந்திரன் அங்கு உரையாற்றுகையில்,

மானுட எழுச்சியை மையமாகக் கொண்டு மட்டுவில் கிராமத்தினை அனைத்து வழிகளிலும் கட்டியெழுப்ப வேண்டியது மிகவும் அவசியமாகும். இங்கு வாழ்கின்ற மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பணியில் நானும் என்னாலான உதவிகளைச் செய்ய ஆர்வம் கொண்டுள்ளேன்.

சமுதாய வளர்ச்சியில் நாமும் ஈடுபடும் போது அது மதமாற்றத்திற்கான நோக்கம் எனக் கொள்ளக்கூடாது. எம்மைப் பொறுத்த மட்டில மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலேயே ஆர்வமாகவுள்ளோம். எவரது மதங்களின் உரிமைகளிலும் சுதந்திரத்திலும் நாம் தலையிடமாட்டோம் எனக் குறிப்பிட்டார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வைத்தியக் கலாநிதி பே. எட்வேட், ஆசிரியர் க. அருந்தவராசா ,பொது முகாமையாளர் வீ. கிருஷ்ணன் , டாக்டர் திருமதி . லியோன் புஸ்ராணி, குடும்பப் புனர்வாழ்வு அதிகாரி எஸ். கனகராசா ஆகியோர் உரையாற்றினா.

மட்டுவில் கிராமத்தின் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி முயற்சிகளை முன்னெடுப்பதற்கென 17பேர் கொண்ட ஆலோசனைச் சபை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (18,16)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஒளி இல்லாமல் எந்தப் பொருளையும் பார்க்க முடியாது. அதுபோலவே ஆராய்ச்சி (ஆத்ம விசாரம்) இன்றி ஞானம் பெற முடியாது. இந்தப் பிரபஞ்சம் முழுவதும் அஞ்ஞானத்தையே ஆதியாகக் கொண்டிருக்கிறது. இது ஞானத்தில் கரைந்து விடும். சுவாமி விவேகானந்தர்

# தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தனிப்படுத்தப்பட்ட ஓர் சம்பவமே!

## சமாதான நடவடிக்கைக்குப் பங்கமில்லையென்கிறார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒரு தனிப்படுத்தப்பட்ட சம்பவம் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பொறுப்புள்ள தமது அரசு பாதுகாப்பு விடயத்தில் கவனம செலுத்தவேண்டி வந்தாலும், தலைநகர் கொழும்பில் மீண் டும் வீதித் தடைகளையும் சோதனைச் சாவடிகளையும் அமைக்க வேண்டிய தேவையில்லையெனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். இச்சம்பவத்தை யுத்த நிறுத்த உடன்படிக்கையின் மீறல் எனவும், தீவிரவாதத்தின் மீள் ஆரம்பம் எனவும் சில தீய சக்திகள் பிரசாரப்படுத்தினாலும், இத்தாக்குதலை ஈ.பி.டி. பி.யின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மீதான தாக்குதல் முயற்சியாகவே தாம் நோக்குவதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

நோர்வேத் தரப்பு தற்போது இருதரப்பையும் சமாதான மேசைக்கு அழைத்துவருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படும் என்பதில் ஐ.ம.சு.மு. அரசு தளராத நம்பிக்கை கொண்டுள்ளது. இவ்வாறான பேச்சுக்களிலில் தாமதங்கள் ஏற்படுவதும், தடங்கல்கள் வருவதும் இயல்பே எனத்தெரிவித்துள்ள ரட்ணசிறி விக்கிரமநாயக்க, இருதரப்பும் சமாதானத்தை அடைவதற்கு உண்மையுடன் முயபனறால், பல பிரச்சினைகளுக்கு உடனடியாகவே தீர்வுகாண முடியும் எனத் தனது நம்பிக்கையை வெளியிட்டுள்ளார். (18)



நேற்று கிளிநொச்சியில் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொன் பியுறு ஹெவ்டே தமிழ்ச் செல்வனைச் சந்தித்த போது

# நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் அரசை மேலும் பலப்படுத்தியுள்ளது

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்ற மக்களாணையை நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் முடிபுகள் மேலும் பலப்படுத்தியுள்ளதெனவும், எனவே தமது முன்னணிக்கு வாக்களித்த மக்களுக்குத் தான் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் முடிபுகள் குறித்து ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடாளுமன்றத் தேர்தலிலும் மாகாண சபைத் தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கே மக்கள் அதிக வாக்குகளை அளித்துள்ளார்கள்.

இதன் மூலம் அரசுக்குப் பெரும் பலம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் அரசின் மீது மக்கள் பூரண நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதை இம் மாகாண சபைத் தேர்தல் முடிபுகள் எடுத்துக் காட்டுகின்றதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (த-60,10)

# தங்காலை சிறைச்சாலையிலிருந்து 6 சிறைக் கைதிகள் தப்பியோட்டம்

(கொழும்பு)

தங்காலை சிறைச்சாலையில் இருந்து ஆறு சிறைக்கைதிகள் நேற்றுக் காலை தப்பியோடிவிட்டதாக சிறைச்சாலை அதிகாரிகள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

சிறைச்சாலை ஜன்னல் ஊடாகவே இவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் கொலைக் குற்றம் புரிந்தவர்களும் இவர்களில் அடங்குவதாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் பொலிஸாருக்குத் தெரிவித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து தப்பிச் சென்ற ஆறு நபர்களையும் கண்டுபிடித்து மீண்டும் கைது செய்வதற்கான நடவடிக்கையில் தங்காலைப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (60,10)

## அமைச்சர் கதிர்காமர் பிரிட்டன் விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரிட்டனுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

அங்கு செல்லும் கதிர்காமர் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் உட்பட அரச பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

பிரிட்டனுக்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காகவே கதிர்காமர் அங்கு சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.(ச)

# விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினால் காலாவதியான பொருட்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் உள்ள மருந்தகங்களில் காலாவதியான மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டு, அவை அழிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ நிதிப் பிரிவின் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்று மேற் கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையிலேயே காலாவதியான பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதேவேளை கட்டவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் காலாவதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காலாவதியான மா பைக்கற்றுக்கள் உட்பட மேலும் பல பொருட்களின் மேலுறைகள் அகற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாக விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு எச்சரித்துள்ளது.

மேலும் காலாவதியான பொருட்களின் விற்பனை குறித்து 222-7594 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு கேட்டுள்ளது. (ச)

# பாராளுமன்ற குளறுபடிகள் குறித்து சபாநாயகரிடம் அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் 22 மற்றும் ஜூன 8ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தின் ஒழுங்கு முறைகளை மீறிச் செயற்பட்ட அரச எம்.பிக்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென சகல எதிர்க் கட்சிகளும் சபாநாயகரைக் கோரியுள்ளன.

ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய, ஜாதிக ஹெல உறுமயவின் அத்துறலிய ரத்தின தேரர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஈழவேந்தன் எம்.பி. மற்றும் செல்லச்சாமி, பி.ராதாகிருஷ்ணன் ஆகியோர் மேற்படி இரு தினங்களிலும் இடம் பெற்ற சம்பவங்கள் பற்றிய தெளிவான அறிக்கையொன்றை கடந்த வியாழன்று சபாநாயகரிடம் கையளித்தனர்.

அவர்களின் அவ்வறிக்கையில்,

ஏப்ரல் 22 ஆம் திகதி சம்பந்தனும் அத்துரலிய ரத்ன தேரரும் பாராளுமன்றத்தில் உரையாற்ற எழுந்த போது அரச எம்.பிக்களான சந்துசேன விஜயசிங்க, மகிநதானந்த அளுத்கமகே, மகிந்த சமர வீர, ஜீவன் குமாரதுங்க, ஸ்ரீபதி சூரியாராய்ச்சி ஆகியோர் அவர்களைப் பேசவிடாது தடுத்ததுடன் அவர்கள் மீது புத்தகங்களையும் வீசி எறிந்துள்ளனர்.

ஜூன் 8 ஆம் திகதி அக்மீமன தயாரத்ன தேரரை பதவிப் பிரமாணம் செய்ய அழைத்தும் மேற்படி உறுப்பினர்கள் தமது இருப்பிடங்களை விட்டு எழுந்து வந்து தேரரைத் தாக்கத் தொடங்கினர். இதனால் அக்மீமன தேரரும், சுமங்கல தேரும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட வேண்டியதாயிற்று.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச சபாநாயகரிடம் அனுமதி பெறாமல் அங்கு நடப்பவற்றைப் படம்பிடித்தார்.

பாராளுமன்றத்தின் முன்மேசையில் வைக்கப்பட்டிருந்த ஆவணத்தைக் கிழித்தெறிந்தார் மேவின் சில்வா.

அத்துடன் , சபாநாயகர் தெரிவில் தமக்கு வாக்களிக்காததால் ஆத்திரமடைந்த டிலான் பெரேரா, மங்கள சமரவீர, லஸந்த அழகியவன்ன மற்றும் ஸ்ரீபதி சூரியாராய்சி ஆகியோர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராக குமாரிகுரே என்ற பெண்ணைத் தொடர்புபடுத்தி அவதூறுபரப்பினர்.

எனவே பாராளுமன்ற ஒழுங்கு முறைச் சட்டங்களை மீறியமைக்காக மேற்படி உறுப்பினர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (18,6)

## யுத்த மேகம்...

வருகின்றோம்.

ஆனால், இது குறித்துப் படைத்தரப்போ அல்லது அரசாங்கமோ ஆக்கபூர்வமாக எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை என்றும் தமிழ்ச்செல்வன் புலிகளின் அதிருப்தியை வெளியிட்டார். (இ-5,4)

## ஐக்கிய மக்கள்...

மாகாண சபைகள் உள்ளன. தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் பார்க்கும்பொழுது 123 தேர்தல் தொகுதிகளை அரசாங்கம் கைப்பற்றியுள்ளது.

பாராளுமன்றத்தில் எவ்வாறான நிலைமைகள் இருந்த போதிலும் மக்களின் ஆணை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே உண்டென்பது தெளிவாகின்றது.

தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் அங்கீகாரம் அளித்து மக்கள் ஆணை வழங்கியிருக்கின்றனர். இந்த யதார்த்த நிலையை சகல அரசியல் கட்சிகளும் உணர்ந்து கொள்ள வேண்டும். அரசியல் ரீதியான நட்புறவுகளை வளர்த்துத் தேசத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்பட அனைவரும் முன்வருவதே காலத்தின் தேவையாகும்.

மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை ஒரு போதும் பாழடிக்கப்படமாட்டதென்றும் ஜனாதிபதி தனது உரையில் உறுதியளித்துள்ளார். (த-121)

## ரி-56 ரகத்...

ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மட்டக்களப்புப் பெரிய போரதீவுப் பகுதியைச் சேர்ந்தவர். ஏனைய இருவரும் ஹட்டன் பகுதியைச் சேர்நதவர்கள், சம்பவம் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கண்காணிப்புக்...

போதைய அரசியல் நிலைபரம் கொழும்பில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல், கிழக்கில் இடம் பெற்றுவரும் சூட்டுச் சம்பவங்கள் என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-121)

## பிரதிப்...

ளுடன மந்திராலோசனை நடத்தியதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.இதன் பின்னணியிலேயே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று யாழ். வருகைதருகின்றார். (த-121)

# வர்த்தகர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் காணமால் போன பிரபல வர்த்தகர் நேற்று நண்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ் வர்த்தகர் நேற்று முன்தினம் வீட்டில் இருந்து புறப்பட்ட போதே காணாமல் போயிருந்தார். நேற்று வெள்ளவத்தைப் பகுதியில் அவரது காருக்குள் இருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது சடலம் காரின் பின்பக்க ஆசனத்தில் காணப்பட்டதாகவும் தலை பொலித்தீன் ஒன்றினால் மூடப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 1ல்- (O/L) வரை மாலை வகுப்புகள்,தமிழ் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம். சிறந்த ஆசிரியர்கள் 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்

**சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை**

**ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறிக்கு பட்டதாரிகளிடமிருந்து**

**விண்ணப்பங்கள் கோரல்**

தமிழீழப் பிரதேச பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறிக்கு' பல்கலைக் கழக பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறி முற்றிலும் இலவசமானது**
**பயிற்சிக் காலத்தின் போது கொடுப்பனவுகளும் வழங்கப்படும்**
**பயிற்சி காலம்: 06 மாதங்கள்**
**விண்ணப்ப முடிவு திகதி:31.07.2004**

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறி' எனக் குறிப்பிட்டு விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை உரிய திகதிக்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றோம்.

**தலைவர்,**
**தலைமைச் செயலகம்,**
**சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,**
**பரமேஸ்வரா சந்தி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

(8640)

**தொலைபேசி இல. : 021-222 3942, 021-222 3768**

திருமண பந்தத்தில் இன்று இணையும்

**மணமக்கள்**

**விஜயசுந்தரம்** (ஆசிரியர்)

**வினோதா** (ஆசிரியை)

அவர்களுக்கு

**இனிய வாழ்த்துக்கள்**

பூத்த நல் மலர்கள்
புதுமண மேடையில்
ஏத்தும் விஜயசுந்தரம்
எழிலாள் வினோதாவை
காத்துக் கரம் பற்றிட
நாத்து இளநங்கை
நாணி நிலம்பார்த்தார்
இணைந்த இருவரும்
நனைந்த உறவினில்
நிறைந்த செல்வங்களுடன்
நல்லவர ாய் வல்லவராய்
நாடுபோற்ற வாழ்வீரே

12.07.2004 வலம்புரிக் குடும்பம்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.